விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 172 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 235 சனிக்கிழமை (08.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களுக்கு ஆர்வம் இல்லை

### விக்னேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களுக்கு காணப்படும் ஆர்வம் தமிழ் மக்களுக்கு இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங் ▷15

## புத்தூர் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு



▷15

# தேர்தலுக்கு அஞ்சுவோர் ராஜபக்ஷக்கள் அல்லர்

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)


தேர்தலுக்கு அஞ்சுவோர் ராஜபக்ஷக்கள் அல்லர். எந்தத் தேர்தலுக்கும் ராஜபக்ஷக்கள் பயப்படுபவர்கள் அல்ல என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## 44,430 ஆயிரம் வாகனங்கள் சந்தையில்

(கொழும்பு)

நாட்டில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலப்பகுதியில் 44,430 வாகனங்கள் சந்தைக்கு விடப்பட்டுள்ளதாக ▷15



நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகியது...

## 21 வயதில் பட்டம் 27இல் கலாநிதிப் பட்டம்

### விரைவில் புதிய கல்வி முறை கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)

நவீன உலகத்துக்கு ஏற்ற வகையில், 21 வயதில் முதல் பட்டப்படிப்பையும், 23 வயதில் பட்ட பின்படிப் ▷15

## ஜனாதிபதியாக -ரணில் பிரதமராக - சஜித் இரகசிய நகர்வு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணிலை ஜனாதிபதி வேட்பாளராகவும் சஜித்தை பிரதமர் வேட்பாளராகவும் கொண்டுவர சிங்கப்பூரில் திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் விடயமாக தேர்தல் ஆணையாளர் எதிர்வருகின்ற ஓகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதிக்கு இடையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் மற்றும் தேர்தல் ▷15

## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவது உறுதி

### அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் களமிறங்குவது உறுதியென அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டாளர்களுடனான சந்திப்பு கொடகமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிலையில் ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இந்த அறிவிப்பை விடுத் ▷15

## பிரதமர் தினேஷ் அடுத்த வாரம் யாழ்., கிளி விஜயம்

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை ஏற்று பிரதமர் தினேஷ் குணவர்தன அடுத்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார். ▷15

## கனேடிய உயர்ஸ்தானிகரால் இதய அதிர்வு இயந்திரம் யாழ்.போதனாவுக்கு கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் பயன்பாட்டிற்காக, இதய அதிர்வு கண்காணிப்பு இயந்திரம் ஒன்று இலங் ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்த தீர்மானம்

தாம் முன்னெடுத்துள்ள சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (09) நள்ளிரவு முதல் தற்காலிக்மாக இடைநிறுத்துவதற்கு இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக இலங்கை கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடலின் போது தங்களின் யோசனைகளை முன்வைத்ததாகவும், அது தொடர்பில் ஆராய்ந்து பதில் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் அஸ்வெசும தொடர்பான பிரச்சினைகளுக்கு 14 நாட்களிலும், உரித்து வேலைத்திட்டம் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஒரு வாரத்திலும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 25 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் போது உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாத பட்சத்தில், தங்களின் தொழிற்சங்க நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,10)

## தேர்தலுக்கு...

ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் உரிய காலத்தில் தேர்தல்களை நடத்த வேண்டும். அவர் தவறு இழைக்கமாட்டார் என்று நம்புகின்றேன்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலைப் பிற்போடும் ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனைக்கு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன ஆதரவு வழங்குமா?

என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல்களைப் பிற்போட நாம் அனுமதிக்க மாட்டோம். குறிப்பாக பிரதான தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தியே தீர வேண்டும்.

எமது நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. ஜனாதிபதியிடம் இதனைத் தெரிவித்துள்ளோம். இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே ஆக வேண்டும். மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விரைவில் வெளிப்படுவார் என்றார். (ம-7,10)


மக்கள் மன்றில்

ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை

பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்

அறிவோர் ஒன்றுகூடும்

அரசியற் கருத்துக் களம்

இடம் : தந்தை செல்வா கேட்போர்கூடம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
காலம் : 2024.06.09, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப 2 மணி 59 நிமிடம்

நிகழ்ச்சி நிரல்

அகவணக்கம்
ஈகச்சுடரேற்றல்
வரவேற்புரை
**திரு. சந்திரலிங்கம் சுகிர்தன்**
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
தலைமையுரை
**கௌரவ சி.வி.கே. சிவஞானம்**
(பேரவைத் தலைவர், வடக்கு மாகாண சபை)
தொடக்கவுரை
**பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன்**
(சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கருத்துரைகள்
**சிரேஷ்ட சட்டத்தரணி நல்லதம்பி சிறீகாந்தா**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
**மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம்**
(முன்னாள் அமைச்சர், வடக்கு மாகாண சபை)
**திரு. சபாபதி சுப்பையா குகநாதன்**
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)
**ஜனாதிபதி சட்டத்தரணி M.A. சுமந்திரன்**
(பாராளுமன்ற உறுப்பினர்)
நிறைவுரை
**பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை**
(முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
நன்றியுரை
**திரு. இம்மானுவல் தயாளன்**
(சமூக செயற்பாட்டாளர்)
நிகழ்ச்சித் தொகுப்பு
**சட்டத்தரணி கேசவன் சயந்தன்**
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)

(1124)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் - 2024
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை - தேசிய பாடசாலை, பருத்தித்துறை


மேற்படிக் கூட்டமானது எதிர்வரும் 22.06.2024 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
அக்கூட்டத்தில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகளின் பெற்றோர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

(C-548)



**Noble Papers**



**Join Our Team...**

**Noble international Papers Lanka (Pvt) Ltd** is a paper manufacturing company which is operating at Industrial Estate Achuvely, Jaffna. Noble is currently manufacturing Verity packing papers and plan to develop the product range to printing papers. To develop our working team Noble is looking for the following vacancies....

**1.Mechanical technician**

Responsible to ensure the smooth operation and maintenance of the machineries.

**Job Responsibilities**

- Maintenance and repair the machinery.
- Installation, testing and calibration.
- Identifying the issues in machinery and finding solutions.
- Providing technical support and advising team members.
- Documentation about the repairing work.

**Candidate profile.**

- NCT or NVQ 4 level Qualification in mechanical field will be an added advantages.
- Minimum 1 to 2 years hands on experience in machine maintenance and mechanical work.

**2.Accounts Executive**

Responsible to ensure the completeness of accounting transactions, record keeping and effective report preparation

- Basic knowledge in accounting and internal control.
- Fair knowledge in English in writing and speak.

**Candidate profile.**


- Fully qualify in AAT or HNDA or equaling other qualification.
- Minimum one year expense in a computerized accounting packages or audit firm experience.
- Candidates with excellent written and spoken English and a Credit for English Language and Mathematics at G.C.E O/L's;


We seek a dedicated, result oriented young individual with good communication skills and sound personal attributes for aforementioned position.

The remuneration package for the above position is very competitive and the rewards are performance driven. If you thing you have what it takes to be success in this challenging roll please apply within 7 days from this publication by email to **nnobleipl@gmail.com** or by post to **Human Resource Department, Noble international Papers Lanka (Pvt) Ltd, Industrial Estate, Achuvely, Jaffna.**

(1135)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. தொடர்ச்சியாக பதினாறு தினங்கள் இடம்பெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 19 ஆம் திகதி சப்பரத்திருவிழாவும் 20 ஆம் திகதி இரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

(படங்கள்: சிவசாந்தன்)

# இலங்கை கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் விரைவில் எட்டப்படும்

## ஐ.எம்.எப் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தமது திட்ட அளவுருக்களுடன் ஒத்துப் போகும் வெளி வணிகக் கடனாளர்களுடன் விரைவில் ஒப்பந்தங்கள் எட்டப்படும் என்று பலமான எதிர்பார்ப்பை சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில், ஜுன் 12 ஆம் திகதி, செயற்குழு ஒன்று கூடி இலங்கை தொடர்பான 2 ஆவது மீளாய்வு தொடர்பில் கலந்துரையாடும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜுலி கோசாக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார கொள்கைச் சீர்திருத்தங்கள் நம்பிக்கைக்குரிய முடிவுகளைக் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிடத்தக்க சாதனைகளில் விரைவான பணவீக்கம், வலுவான இருப்பு சேர்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் ஊக்கமளிக்கும் அறிகுறிகள் என்பன அடங்கும் என்றும் இவை அனைத்தும் நிதி ஸ்திரத்தன்மையை பராமரிக்கின்றன என்றும் ஜுலி கோசாக் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் கடன் மறுசீரமைப்பின் அடுத்த படிகளாக வெளிப்புற வணிகக் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை முடிப்பது மற்றும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் கொள்கை அடிப்படையில் ஒப்பந்தங்களைச் செயற்படுத்துவது என்பவையே எஞ்சியுள்ளன என்று ஜுலி கோசாக் தெரிவித்துள்ளார். (நி-6)

### ஜனாதிபதியை அவசரமாகச் சந்தித்த

# ஆளும் கட்சி உறுப்பினர்கள்

(கொழும்பு)

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு பத்தரமுல்ல பகுதியில் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

எதிர்கால அரசியல் நிலைமைகள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 31 உறுப்பினர்கள் இந்த சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

மாவட்ட இணைப்புச் செயற்குழுக்களின் தலைவர்களும் இந்த சந்திப்பில் இணைந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் இந்த சந்திப்பில் பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# கடவுச்சீட்டு விநியோகத்தில் கடுமையாகும் கட்டுப்பாடு

(கொழும்பு)

சில தசாப்தங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளில் தற்போது அந்த நபரின் அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாமையினால் கடவுச்சீட்டு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய, தேசிய அடையாள அட்டைகளில் தெளிவற்ற புகைப்படங்கள், எண்கள் மற்றும் எழுத்துக்களை வைத்திருக்கும் நபர்கள் கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் தேசிய அடையாள அட்டையை தயார் செய்ய வேண்டும்.

கடவுச்சீட்டிற்கு விண்ணப்பிக்கும் போது தெளிவான அடையாளத்துடன் கூடிய தேசிய அடையாள அட்டையை முன்வைக்குமாறு குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

மேலும் கடவுச்சீட்டு வழங்குவதற்கு விண்ணப்பதாரரின் விண்ணப்பப்படிவம், ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் வண்ணப் புகைப்படம், தேசிய அடையாள அட்டை, பிறப்பு சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

பல விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த தேசிய அடையாள அட்டைக்கமைய, விண்ணப்பதாரரை உண்மையான விண்ணப்பதாரராக அங்கீகரிக்க முடியாததன் காரணத்தால் கடவுச்சீட்டை வெளியிட முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களின் தேசிய அடையாள அட்டைகள், புகைப்படங்கள், பிறப்புச் சான்றிதழ்கள் போன்றன குடிவரவு அமைப்பில் ஸ்கான் செய்து புதுப்பிக்கப்படும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# இரண்டு வாரங்களில் ஆசிரியர் நியமனங்கள்

## கல்வி அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் விஞ்ஞானம், தொழிநுட்பம், கணிதம் போன்ற துறைகளில் 10,535 ஆசிரியர் வெற்றிடங்களுக்கான நியமனக் கடிதங்கள் அடுத்த இரண்டு வாரங்களில் வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விடயத்தை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

இதன்படி தேசிய பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை நிரப்பப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 8000 எனவும் மாகாண மட்டத்தில் 6000 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# மந்திகை மருத்துவமனையில் கண்புரை சத்திரசிகிச்சை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவு செய்யும் கண்பரிசோதனை முகாம் இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பருத்தித்துறை (மந்திகை) ஆதார மருத்துவமனையில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ்.போதனா மருத்துவமனையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.

எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியியல் நடபடிமுறைக்கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல்
## வவுனியா மாவட்ட நீதிமன்றில்

1. செல்வரத்தினம் சுதாகரன்
இயங்கராவூர் பூவரசங்குளம், வவுனியா.
2. சூரியமூர்த்தி சூரியபிரபா
இல.302/5. உள்துறைமுக வீதி.
திருகோணமலை.

வழக்காளிகள்

வழக்கு இல: நானாவிதம் /41/24
பெறுமதி 10 மில்லியன்
நடபடிமுறை பொது
தன்மை விசேடம்

எதிர்

01. வீ.ஆனந்தசங்கரி
செயலாளர் நாயகம்
தமிழர் விடுதலைக் கூட்டணி
02. ப.சிறிதரன் தலைவர் தமிழர் விடுதலைக் கூட்டணி
03. க.பூலோகரட்ணம் நிர்வாக செயலாளர்
தமிழர்விடுதலைக்கூட்டணி
04. ஐ.அசோக்குமார்
சிரேஸ்ட உபதலைவர்
தமிழர் விடுதலைக்கூட்டணி
05. தி.சஞ்செயன்
06. ரோய் ஜெயக்குமார்
07. அருள்மொழிவர்மன் தம்பிமுத்து
08. பவதாரிணி ராஜசிங்கம்
09. மகழ்நம்பி தட்சாணமூர்த்தி
10. ரொபட் நிக்சன்
11. பெனடிக்ட் ஸ்ரீபாதம்
12. பிலிப் முருகையா
13. கணேஷநாதன் சபேசன்
14. சண்முகி ஜெகதீஸ்
15. பிரதீஸ் கிஷோர்
16. ஜோசப் றொஷாந்
17. சிவபரதசுந்தரம் சிவகுமார்
18. பொன்னுச்சாமி கயந்தன்
19. ஆறுமகம் ஜோன்சன்
20. ஞானசங்கரி ஜீவசங்கரி
21. ஆனந்தசங்கரி ஜெயசங்கரி
22. வசந்தி புவனேந்திரா
23. செல்லையா விஜெயரட்ணன்

அனைவரும்
தமிழர் விடுதலைக் கூட்டணி
தலைமைக் காரியாலயம்
இல.315. A9 வீதி.
கிளிநொச்சி.

எதிராளிகள்

மேற்படி பெயர் குறித்த வழக்காளிகளினால் 2024.04.05ம் திகதி தாக்கல் செய்யப்பட்ட பிராதின் பிரகாரம்.

மேற்படி 1ம்.2ம் எதிராளிகளின் தலைமையில் 16.03.2024 இல் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களாகிய வழக்காளிகளுக்கு எந்தவித எழுத்து மூல அறிவித்தலுமின்றியும், வழக்காளிகள் உட்பட பல மகளிர் பேரவை, தொழிற்சங்க உறுப்பினர்கள், பதவியாளர், செயற்குழு உறுப்பினர்களுக்கு எதுவித அறிவித்தலுமின்றியும், ஒரு சில உறுப்பினர்களுக்கு மட்டும் அறிவிப்பு விடுக்கப்பட்ட அறிவித்தலுடன் அதே தினத்தில் ஈரப்பெரியகுளம் உள்ளூராட்சி மண்டபத்தில் கூடுமாறு எதிராளிகளும் ஒருசில உறுப்பினர்களும் பொதுச்சபை உறுப்பினர்களல்லாதவர்களையும் அழைத்து கூட்டம் நடாத்தப்பட்டு 7ம், 8ம் எதிராளிகள் முறையே தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைவர், சட்டத்துறை செயலாளர் நிர்வாக செயலாளராக நியமிக்கப்பட்டு அதனடிப்படையில் 07.04.2024 இல் திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு ஒன்றை கூட்ட எதிராளிகள் அழைப்பிதழ் அனுப்பியுள்ளனர்.

குறித்த செயலானது தமிழர் விடுதலைக்கூட்டணியின் யாப்பின் 13(4) ம் ஏற்பாடுகளுக்கு முரணானது எனுமடிப்படையில் வழக்காளிகளினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பின்வரும் நிவாரணங்கள் பிராதில் கோரப்பட்டுள்ளது.

I. குடியியல் நடபடிமுறைக்கோவையின் பிரிவு 16 இன் கீழான பிரகாரம் ஒன்றை மேற்கொள்வதற்கான கட்டளையை வழங்குமாறும்.
II. பிராதுடன் "வ07" என அடையாளமிடப்பட்டணைக்கப்பட்டதும் 05.03.2024 திகதியுடையதுமான அறிவித்தல் சட்ட விரோதமானது மற்றும் / அல்லது யாப்புக்கு முரணானது மற்றும் / அல்லது செல்லுபடியற்றது என்ற தீர்வை.
III. பிராதுடன் "வ07" என அடையாளமிடப்பட்டணைக்கப்பட்டதும் அறிவித்தலின் பிரகாரம் வவுனியா ஈரப்பெரியகுளம், உள்ளூராட்சி மண்டபத்தில் 16.03.2024 நடைபெற்ற கூட்டம் சட்டவிரோதமானது மற்றும் / அல்லது யாப்புக்கு முரணானது மற்றும் / அல்லது செல்லுபடியற்றது என்ற தீர்வை.
IV. 16.03.2024ம் திகதி சட்டமுரணான விதத்திலும், யாப்புக்கு முரணாகவும் நடைபெற்ற கூட்டத்தில் செய்யப்பட்ட தீர்மானங்கள் மற்றும் / அல்லது நியமனங்கள் சட்டமுரணானதும் செல்லுபடியற்றதும் என்ற தீர்வை.
V. 16.03.2024ம் திகதி சட்டமுரணாகவும் யாப்பின் உறுப்புரையை மீறியும் நடாத்தப்பட்ட கூட்டத்தின் அடிப்படையில் 07.04.2024இல் திருகோணமலையில் நடாத்த உத்தேசித்துள்ள மாநாடு முறையற்றது என்ற தீர்வை.
VI. 07.04.2024 இல் திருகோணமலையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமான 1ம் எதிராளியினால் நடாத்தப்படவுள்ளதும் 7ம்.8ம் எதிராளிகளை தலைவராகவும், சட்டத்துறை செயலாளராகவும் நியமித்து பிரகடனப்படுத்தப்படவுள்ள மாநாட்டை இடைக்காலத் தடைக்கட்டளை பற்றிய விசாரணை முடியும் வரை தடுக்கும்படியான கட்டாணையை வழங்குமாறும்.
VII. இவ்வழக்கானது விளங்கித்தீர்க்கப்படும் வரையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமான 1ம் எதிராளியினால் நடாத்தப்படவுள்ளதும் 7ம்.8ம் எதிராளிகளை தலைவராகவும், சட்டத்துறை செயலாளராகவும் நியமித்து பிரகடனப்படுத்தபடவுள்ள மாநாடு நடாத்தபடலை நிறுத்தி வைப்பதற்கான இடைக்காலத்தடைக்கட்டளையை வழங்குமாறும்.
VIII. வழக்குச்செலவு
IX. மன்று தக்கதெனக்கருதும் இன்ன பிற நிவாரணங்கள்.

எனவே இவ்வழக்கில் பெயர் குறிப்பிடப்படாவிடினும் இவ்விடயம் தொடர்பில் அக்கறையுள்ள ஆள் எவரேனும் இருப்பின் மேலே வழக்காளிகளினால் பிராதில் கோரப்பட்ட நிவாரணமானது வழங்கப்படுவதில் ஏதேனும் ஆட்சேபணை காணப்படின் 2024ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி கௌரவ மன்றில் நேரடியாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ தோன்றி வழக்காளியினால் பிராதில் கோரப்பட்ட மேற்படி நிவாரணங்கள் ஏன் வழங்கப்படக்கூடாது என்பது தொடர்பிலான ஆட்சேபணையை தெரிவிக்குமாறு இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இவ்வறிவித்தலானது குடியியல் நடபடிமுறைக்கோவையின் பிரிவு 16 இன் பிரகாரம் வவுனியா மாவட்ட நீதிமன்றின் கட்டளைப்படி பத்திரிகைப்பிரசுரம் செய்யப்படுகின்றது


மன்றின் கட்டளைப்படி

2024 06. மாதம் 06. ம் திகதி

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், வவுனியா

(1136)

# சூப்பர் ஓவர்
## பாகிஸ்தான் ஏமாற்றம்
## அமெரிக்கா அசத்தல்



ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 11 ஆவது போட்டி நேற்று இரவு நடைபெற்றது. பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா அணிகள் மோதிய இந்த போட்டியில் டாஸ் வென்ற அமெரிக்கா அணி முதலில் பந்துவீச்சு தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பட்டிங் செய்த பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 159 ரன்களை சேர்த்தது. பாகிஸ்தான் அணிக்கு கப்டன் பாபர் அசாம் 44 ரன்களையும், ஷதாப் கான் 40 ரன்களையும் சேர்த்தனர். கடைசியில் களமிறங்கிய ஷாஹீன் ஷா அப்ரிடி 23 ரன்களை விளாசினார்.

இதையடுத்து 160 என்ற இலக்கை துரத்திய அமெரிக்கா அணி துவக்கம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தியது. அமெரிக்கா அணியின் தொடக்க வீரரும், கப்டனுமான மொனாக் படேல் 38 பந்துகளில் அரைசதம் கடந்து அவுட் ஆனார்.

இவரைத் தொடர்ந்து வந்த வீரர்கள் தங்கள் பங்கிற்கு ரன்களை சேர்க்க அந்த அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 159 ரன்களைச் சேர்த்தது. இதன் காரணமாக போட்டி சமனில் முடிந்தது. இதனால் சூப்பர் ஓவர் கொண்டு வரப்பட்டது. சூப்பர் ஓவரில் முதலில் பட்டிங் செய்த அமெரிக்கா 1 விக்கெட் இழப்புக்கு 18 ரன்களை சேர்த்தது.

19 ரன்களை துரத்திய பாகிஸ்தான் அணி சூப்பர் ஓவரில் 1 விக்கெட் இழப்புக்கு 13 ரன்களை மட்டுமே சேர்த்தது. இதன் காரணமாக போட்டியில் அமெரிக்கா அணி 5 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை


| | | | |
|---|---|---|---|
| இந்தியா | - 1490/= | சுவிஸ் | - 2050/= |
| கனடா | - 2290/= | பிரான்ஸ் | - 2290/= |
| லண்டன் | - 1250/= | அவுஸ்திரேலியா | - 2350/= |
| அமெரிக்கா | - 2290/= | இத்தாலி | - 2490/= |
| ஜேர்மனி | - 2250/= | நோர்வே | - 2050/= |

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு
077 8393 974

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு
ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக
நேரடியாக இறக்குமதி செய்து தரப்படும்.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956615 6719
WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும்
பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக
பெற்றுக்கொள்ளலாம். (1083) (1145)

**VAN**
**விற்பனைக்கு**
Super Long 251 -
தொடர் இலக்கமுடைய
Van விற்பனைக்கு
077 317 9515
(1139)


## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முருகேசு கந்தசாமி
(ராஜன் எலக்றிக்கல்ஸ் உரிமையாளர்)

பிறப்பு 20.05.1950 இறப்பு 19.05.2015

**திதி : துதியை**

அப்பா, நீங்கள் காட்டிய வழியில்
நாம் வீறு நடை போட்டுச் செல்கிறோம்
ஆண்டுகள் ஒன்பது ஆகியும்
நீங்கள் எம்முடனேயே
இருப்பதாகவும் பயணிப்பதாகவும்
உணர்கிறோம்
நீங்கள் எங்கள் மேல் கொண்ட
அன்புக்கும் பாசத்துக்கும்
ஈடு இணையே இல்லை அப்பா
என்றும் உங்கள் நினைவுடன் நாம்

குடும்பத்தினர்

(C-0551)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டுவுடனான உறவைத் துண்டித்தால்

## கூட்டணி அமைப்பது தொடர்பில் பேசத் தயார்

### ஐ.தே.க விடம் சஜித் அணி தெரிவிப்பு



(கொழும்பு)

"ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடனான உறவை முறித்துக் கொண்டால் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சு நடத்தலாம்." இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"எம்மை இணைத்துக் கொள்வதற்குரிய தேவைப்பாடு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கலாம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் திட்டம் எமக்கு இல்லை.

நாட்டில் பிரதான அரசியல் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியாகும். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பயணிக்கும் எந்த தேவைப்பாடும் எமக்குக் கிடையாது.ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் தொடர்பில் இருந்த பிரச்சினை காரணமாகவே வெளியேறி நாம் சஜித் பிரேமதாஸ தலைமையில் தனிக்கட்சி அமைத்தோம்.

வெற்றியை நோக்கி எமது கட்சி பயணித்துக் கொண்டிருக்கின்றது. எம்முடன் கூட்டணி அமைப்பதற்கு பல கட்சிகளும் முன் வந்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடனான உறவை முறித்துக்கொண்டு சஜித் பிரேமதாஸ தலைமையில் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் முன்வந்தால் அது பற்றி பேச்சு நடத்தலாம்." என அவர் தெரிவித்தார். (நி-6)

# பெரமுனவின் அழைப்பாளராக ரோஹித

(கொழும்பு)



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அழைப்பாளராக ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற பொஹொட்டுவ கட்சியின் செயற்குழு மற்றும் பொலிட் பீரோ கூட்டத்திலேயே அது இடம்பெற்றுள்ளது.

கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் கட்சியின் செயலாளர் சாகர கரிவாசம் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-6)


# 200 அடி பள்ளத்தில் விழுந்த கார்

(ஹற்றன்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பயணித்த மகிழுந்து ஒன்று வீதியை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் விழுந்து விபத்திற்குள்ளானது. நேற்று முன்தினம் மாலை காசல்ரீ நீர்த் தேக்கத்திற்கு அருகில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் மகிழுந்தில் பயணித்த பெண் ஒருவர் காயமடைந்த நிலையில், டிக்கோயா ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்தின் போது மகிழுந்தில் ஒரு குழந்தை உட்பட 4 பேர் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மகிழுந்து இருக்கைப் பட்டியை அணியாமையினால் ஒருவருக்கு மாத்திரம் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி-6)





உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு யாழ்.கியூடெக் அமைப்புடன் இணைந்து வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சாட்டி கடற்கரையினை துப்புரவாக்கும் நிகழ்வு மற்றும் மரநடுகை நிகழ்வானது கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. அனைத்து மத தலைவர்கள், கியூடெக் அமைப்பின் உத்தியோகத்தர்கள், வேலணை பிரதேச சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், மாவட்ட சுற்றுச்சூழல் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# இராசிபலன்

08.06.2024
வைகாசி 26, சனிக்கிழமை,
துதியை பிற்பகல் 5.21 மணிவரை

திருவாதிரை முன்னிரவு 9.23 மணிவரை
சுபநேரம் -2.52-4.22 மணிவரை
இராகுகாலம் -8.52-10.22 மணிவரை

உலக சமுத்திர தினம்
சந்திராஷ்டமம்.
சுவாதி, விசாகம்.

வளவன்

**மேஷம்** நீண்டநாளைய பிணக்குளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**ரிஷபம்** நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், உறவினர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், பொது வாழ்வில் புகழ் கூடும், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், இறைவழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்** பயணங்கள் கூடும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு, குடும்பத்தில் குதுகலம் தரும் சம்வங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**துலாம்** தடை விலகி தன வரவு கூடும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்,புதிய முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** வழிபாடு குதூகலம் தரும், பிரயாண பயமுண்டு, பண விரயங்கள் கூடும் நாள், வரவும், செலவும் சமமாகும் நாள், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், கௌரவமான நாள்.

**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.


**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உடல்நலன் சீராகும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

நன்றி காட்டுதல் என்பது ஏழைகள் திருப்பி அடைக்கும் கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதினத்திற்கு வருகை தந்த கனேடியத் தூதுவர்

## இந்து சமயத் தலைவர்களுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

கனேடியத் தூதுவர் இந்து சமயத் தலைவர்களைச் சந்திப்பதற்காக நேற்று நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்துக்கு வருகை தந்தார்.

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற்செல்வர்.கலாநிதி. ஆறு.திருமுருகன், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோருடன் நாட்டின் இன்றைய சூழ்நிலை தொடர்பாக கலந்துரையாடினார்.

மேலும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றிய இந்து சமயத் தலைவர்கள் மூவரும் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக கனடா இலங்கை அரசுடன் பேசவேண்டும் என்பதனை கனேடிய தூதுவரிடம் வலியுறுத்தியிருந்தனர். மேலும் கனடா துணைத் தூதரகத்தை வடக்கில் நிறுவி, மக்களுக்கு உதவ வேண்டும் எனவும் கனடா தூதுவராலய விசா அலுவலகம் வடக்குப் பகுதியில் அமைய வேண்டிய அவசியத்தையும் தெளிவுபடுத்தியிருந்தனர். (நி-6)

# வைத்திய அத்தியட்சகராக மருத்துவர் காண்டீபன் நியமனம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் புதிய வைத்திய அத்தியட்சகராக மருத்துவர் த.காண்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகராக கடமையாற்றிய மருத்துவர் எஸ்.குமாரவேல் அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை புதிய அத்தியட்சகராக வைத்திய மருத்துவர் த.காண்டீபன் கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிவந்த உணவகம்

## ரூ.15 ஆயிரம் தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் உணவு கையாளும் நிலையத்தினை நடத்திய உரிமையாளருக்கு 15 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்ததுடன் நீதிமன்று எச்சரித்துள்ளது.

ஏழாலைப் பகுதியில் பொது சுகாதார பரிசோதகரால் முன்னெடுக்கப்பட்ட திடீர் பரிசோதனையில் சுகாதார சீர்கேட்டுடன் உணவு கையாளும் நிலையம் இயங்கி வந்த நிலையில், அதன் உரிமையாளருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட போது மன்றில் முன்னிலையான உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து , 15 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மன்று உரிமையாளரை கடுமையாக எச்சரித்து விடுவித்தது. (நி-6-30)



சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யாழில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை யோகா தின நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கொன்சல் ஜெனரல் ஸ்ரீ சாய் முரளி பிரதம அதிதியாக ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் மஞ்சுளாதேவி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கிருஷ்ணகுமார், அதிகாரிகள் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர (தேசிய பாடசாலை) அபிவிருத்திச் சங்கம் பொதுக் கூட்டம் எதிர்வரும் 22.06. 2024 சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த கூட்டத்தில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகளின் பெற்றோர்களை கலந்து கொள்ளுமாறு யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபர் அறிவித்துள்ளார். (நி-6)

# வீதியில் முறிந்து வீழ்ந்த பாரிய வேப்பமரக்கிளை




(அக்கராயன்)

கச்சேரி நல்லூர் வீதியில் பாரிய வேப்ப மரக்கிளை ஒன்று வீதியில் முறிந்து விழுந்ததன் காரணமாக சில மணி [illegible] நேரங்கள் போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்றுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகைதந்த மின்சார சபையினர் குறித்த வேப்ப மரக்கிளையினை அகற்றி போக்குவரத்தினை சீர் செய்திருந்தனர்.

அதேவேளை தற்போது வீசும் கடும் காற்று காரணமாக மரங்கள் முறிந்து வீதியில் விழுகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருகிறமை சுட்டிக்காட் [illegible]



சுற்றாடல் தினத்தை முன்னிட்டு "சுற்றாடலும் போசாக்கும்" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த புதன்கிழமை மாநகர சபையின் பிள்ளை கிளி அமுதம் முன்பள்ளி [illegible] சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாஸ் தலைமையில் [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் 800 தொன் பிளாஸ்ரிக் கழிவுகள்

## நீர் நிலைகளில் சேர்வதாகக் கண்டறிவு

**(கொழும்பு)**

**வருடாந்தம் 800 தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் நீர் நிலைகளில் சேர்வதாகச் சுற்றாடல் துறைசார் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவில் கண்டறியப்பட்டுள்ளது.**




அத்துடன் வருடாந்தம் 1,600 பிளாஸ்ரிக் கழிவுகள் ஏற்றுமதி செய்யப்படுவதாக குறித்த மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப் பெரும தெரிவித்துள்ளார்.

முறையான பிளாஸ்ரிக் மீள் சுழற்சி செயன்முறையின் ஊடாக, சுற்றாடலுக்கு பிளாஸ்ரிக் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாராளுமன்ற கட்டடத் தொகுதியிலிருந்து அகற்றப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிப்பதற்கான, விசேட வேலைத்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இரத்த சுத்திகரிப்பு

## இயந்திரங்கள் வழங்கி வைப்பு



(சாவகச்சேரி)


சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பயன்பாட்டிற்கான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு மருத்துவ மனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத் தொகுதியில் நேற்று இடம் பெற்றது.

கனடா செந்தில்குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் 64 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

மேற்படி இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களின் உதவியுடன் நாளாந்தம் 4நோயாளர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சேவையை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (நி-6-30-33)

# விவசாயத்தில் புதிய புரட்சி

## ஜனாதிபதி ரணில் உறுதி



(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போட்டி விவசாயத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் இடம் பெற்றது.

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் முன்னோடித் திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையும் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி சந்தைக்கான பொருட்களை போட்டித்தன்மையுடன் வழங்குவதும், அதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையை வெல்வதும், அந்நியச் செலாவணி மற்றும் விவசாயப் பொருளாதாரத்தை அதிகரிப்பதும் இந்த திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் இலக்குகளாகும்.

இந்த இலக்குகளை அடைவதற்காக, குரங்குகள் மற்றும் காட்டு யானைகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கு பொருத்தமான பொறிமுறையைத் தயாரிப்பது குறித்தும் வெகுவாக ஆராயப்பட்டது.

எதிர்கால ஏற்றுமதி சந்தையில் போட்டியை எதிர்கொள்வதற்கு நவீன தொழில்நுட்பம் இன்றியமையாதது எனவும் விவசாய நிலங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தலையீடு தேவை எனவும் கலந்துரையாடலில் கலந்து கொண்ட தனியார் துறை பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கை எனும் தனித்துவத்துடன் கூடிய பொருட்களை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கு தற்போதுள்ள தடைகளை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையீடு செய்ய வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 77<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Quantity Surveyor<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14592 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L,தையல்<br>எதிர்பார்ப்பு:தகுந்த வரன்<br>தொ.இ: G/7262 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Dental Doctor, Dental Surgen<br>எதிர்பார்ப்பு: தகுதியான, அழகான பெண்<br>தொ.இ: B/14594 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BBM, Company Work (Pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/13762 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>சூரி செவ் 9 இல்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Aeromatical Engineer<br>எதிர்பார்ப்பு: படித்த நற்குணமுள்ள பெண்<br>தொ.இ: B/14595 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>சூரி செவ் 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13774 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 33 1/4<br>உயரம்:6<br>தகைமை/தொழில்: Bsc, Msc(London)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (லண்டன்)<br>தொ.இ: B/14597 | பிறப்பு:1995 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 26 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Computer Science, Online Work<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/13776 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய அரசியல் அமைப்பு புத்தகத்தை சாஷ்டாங்கமாக வணங்கிய மோடி



(டில்லி)

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. உட்பட எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. மொத்தமுள்ள 543 இடங்களில் 240 தொகுதிகளை மட்டுமே அந்தக் கட்சியால் கைப்பற்ற முடிந்தது. அதேநேரம் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 293 இடங்களில் வெற்றியை பதிவு செய்தது.

பா.ஜ.க. கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், பிரதமர் மோடியே 3 ஆவது முறையாக ஆட்சியமைக்க தங்கள் ஆதரவை அளித்தனர்.

அத்துடன் தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவராக பிரதமர் மோடியை ஒரு மனதாகத் தேர்வு செய்தனர்.


இதற்கிடையே புதிய மந்திரி சபையில் யார் யாருக்கு இடமளிப்பது குறித்து கட்சித் தலைவர்களிடையே பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இந்த பரபரப்பான சூழலில் பா.ஜ.க. உள்ளிட்ட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் புதிய எம்.பிக்கள் கூட்டம் டில்லியில் நேற்று நடைபெற்றது.

பழைய பாராளுமன்ற கட்டடத்தின் மத்திய அரங்கில் தொடங்கிய கூட்டத்தில் 293 இடங்களில் வெற்றி பெற்றுள்ளவர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் மோடி பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கூட்டத்தில் பங்கேற்க பழைய பாராளுமன்றத்துக்கு வந்த மோடி அனைவருக்கும் வணக்கம் வைத்து விட்டு நேராக இந்திய அரசியலமைப்பு புத்தகம் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு சென்று, அதை கையில் எடுத்து நெற்றியில் ஒத்திக் கொண்டார். பின் அதை தலை வணங்கி தொட்டுக்கையெடுத்துக் கும்பிட்டு அதன் பின்னரே தனது இருக்கைக்குச் சென்று அமர்ந்தார். (நி-6)

## மோடி பதவியே

### உத்தியோகபூர்வ அ




(டில்லி) —
இந்தியாவி
9ஆம் திகதி
வுள்ளதாக
பூர்வமாக அ

பாராளு
லில் உ
மாநிலப
தொகுதி
பா.ஜ.க.
தமர்மோ
யாக, 6.
களால் 6
ளார்.
இந்நி
ஜனநாய

## பழங்கால ரயில் முன்பு செல்பி நொடியில் பறிபோன உயிர்

### வைரலாகும் அதிர்ச்சி வீடியோ





(மெக்சிகோ)

கனேடிய பசிபிக் கன்சாஸ் சிட்டியை உருவாக்கிய நட்பு ரீதியான இணைப்பைக் கொண்டாடும் விதமாக, 1930 இல் உருவாக்கப்பட்டது ஒரு நீராவி இன்ஜின் ரயில்."பேரரசி" என்று அழைக்கப்படக்கூடிய இந்தப் பழங்கால ரயில் கடந்த ஏப்ரல் மாதம் கால்கரியில் இருந்து புறப்பட்டு கனடா, அமெரிக்கா வழியாக மெக்சிகோவைச் சென்றடைகிறது.

இந்த ரயில் மெக்சிகோவில் தன் பயணத்தை நிறைவு செய்து. பின்னர், ஜூலை மாதம் கனடா திரும்பி, அத்துடன் அங்கு ஓய்வு பெறுகிறது.

இந்நிலையில், பேரரசி ரயில் மெக்சிகோவில் நுழையும் போது ஹிடால்கோ பகுதி அருகே பலரும் புகைப்படம் எடுப்பதற்காக கூடினர்.

அப்போது, தன் மகனுடன் வந்திருந்த இளம்பெண் ஒருவர் பேரரசி ரயில் முன்பு செல்பி எடுக்க தனது செல்போனை எடுத்தார்.


ரயில் அருகே வரும் போது, தண்டவாளம் அருகே சென்ற இளம்பெண் செல்போனுடன் முட்டி போட்டு அமர்ந்தார்.

அப்போது, ரயிலின் எஞ்சின் இளம்பெண்ணின் தலையில் மோதியது. இதில், பலத்தகாயமடைந்த பெண் அடிபட்ட நொடியிலேயே உயிரிழந்தார்.

ரயிலில் அடிபட்டு பெண் உயிரிழக்கும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. (நி-6)

## களைகட்டிய ஆனந்த் அம்பானி திருமண விழா ஆத்திரத்தில் இத்தாலி மக்கள்









(வத்திக்கான்)

உலக பணக்காரர்களில் ஒருவரும் ரிலையன்ஸ் உள்ளிட்ட பெருநிறுவனங்களின் உரிமையாளருமான முகேஷ் அம்பானி தனது இளைய மகன் ஆனந்த் அம்பானியின் திருமணத்தை விமர்சையாக நடத்தி வருகிறார். என்கோர் ஹெல்த்கேர் நிறுவனத்தில் சி.இ.ஓ விரென் மெர்ச்சண்டின் மகள் ராதிகா மெர்ச்செண்டுடன் ஆனந்த் அம்பானிக்குக் கடந்த ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி பிரமாண்டமாக நிச்சயதார்த்தம் நடைபெற்றது.

அதன்பிறகு நடந்த ப்ரீ வெட்டிங் வைபவத்தில் அமிதாபச்சன், ஷாருக்கான், சல்மான்கான், அமீர்கான், ரஜினிகாந்த், ஐஸ்வர்யா ராய், கரீனா கபூர், தீபிகா படுகோன் ஆலியாட் ஜான்வி கபூர், கேத்ரீனா கைஃப் ... உட்பட பல இந்திய பிரபலங்களும் கலந்து கொண்டனர்.

பிரான்ஸ் தலைநகர் இத்தாலியில் சொகுசு கப்பலில் கடந்த மே 29 ஆம் திகதி முதல் 4 நாட்களுக்கு ஆனந்த் அம்பானி மற்றும் ராதிகா மெர்ச்சண்டின் 2 ஆவது ப்ரீ வெட்டிங் கொண்டாட்டம் ஆடம்பரமாக நடைபெற்றது. இதில் பிரபல பாப் பாடகி கேட்டி பெர்ரி உட்பட பல சர்வதேச நட்சத்திரங்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை அலங்கரித்தனர்.

பால்மிரோவில் இருந்து கிளம்பிய திருமண கொண்டாட்ட கப்பல் தெற்கு பிரான்ஸ் வரை சென்று திரும்பியது. அதன்பிறகு இத்தாலி நகரத்துக்குள் தொடரும் இந்த நிகழ்ச்சிக்காகப் பல இடங்கள், சுற்றுலாப் பயணிகள் வரவும், உள்ளூர் மக்கள் நுழையவும் தடை செய்யப்பட்டது.

கேரளாவைப் போல இத்தாலி நகரத்துக்கிடையில் நீர்நிலைப் போக்குவரத்து அதிகம். திருமண நிகழ்ச்சிக்காக சில நீர் வழிப் பாதைகளை அடைத்ததால் உள்ளூர் வியாபாரம் பாதிக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் ரெஸ்டாரன்டுகள் இந்த நிகழ்ச்சிக்காக மொத்தமாக வாடகைக்கு எடுக்கப்பட்டது முகம் சுளிக்க வைத்துள்ளது.

பணத்தால் அனைத்தையும் வாங்கி மற்றவர்களை வரவிடாமல் செய்வது நியாயமானது அல்ல எனச் சுற்றுலாப் பயணிகளும் உள்ளூர் வாசிகளும் அபிப்பிராயப் படுகின்றனர். அது மட்டுமின்றி, நிகழ்ச்சி நடக்கும் இடங்களில் இருந்து வரும் அதிக சத்தத்தாலும், நிகழ்ச்சிக்கு வருகை தருபவர்களின் மரியாதைக் குறைவான நடத்தையாலும் உள்ளூர் மக்களும், விடுதி ஊழியர்களும் கடும் கோபத்தில் உள்ளனர். இது தொடர்பாக பொலிஸாரிடம் அவர்கள் புகார் அளித்து வருகின்றனர். (நி-6)

## சுப
## ஆ

(டமாஸ்
சிரியா
மேற்பட்ட
சென்ற பா
ஆற்றில் எ
ளானது.கு
கணக்கா
ந்துள்ளது
மீக்கப்பட்
அனுமதிக்
சிரியா
ஒரோன்
லைப் பே
துக்குள்ளா

## விண்
## சுனிதா

(வோஷ்
போயி
வடிவமை
லைனர் வ
நாசா வி
புட்சி வில்
வெளி
சுனிதாவ
ஆகியோ
கொண்டு
யில் அ
புதன்கிழ
நேற்று
தனர்.சும
மேற்கொ
இந்நி
அந்தரத்தி
வெளியிட்
குதூகலம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யற்பு ஒத்திவைப்பு!

## ப அறிவிப்பு வெளியானது

(...)

**யாவின் பிரதமராக நரேந்திர மோடி எதிர்வரும் திகதியன்று சத்தியப்பிரமாணம் செய்துக்கொள்ள தாக பாரதீய ஜனதாக்கட்சி நேற்று உத்தியோக க அறிவித்துள்ளது.**

பாராளுமன்ற தேர்த ... ில் உத்தர பிரதேச ... ாநிலம் வாரணாசி தொகுதியில் போட்டியிட்ட ...ா.ஜ.க. வேட்பாளர் பிர ...மர்மோடி 3ஆவதுமுறை ...ாக 6,12,970 வாக்கு ...களால் வெற்றி பெற்றுள் ...ார்.


இந்நிலையில், தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களின் சந்திப்பை தொடர்ந்து நரேந்திர மோடியின் தலைமையில் புதிய ஆட்சி அமைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தொடங்கியுள்ளன.

டெல்லியில் நரேந்திர மோடி வரும் 9 ஆம் திகதி மாலை 6 மணிக்கு மூன்றாவது முறையாக பிரதமராக பதவி ஏற்கவுள்ளார்.

ஏற்கனவே வரும் 8 ஆம் திகதி மோடி பிரதமர் பதவி ஏற்பார் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பதவி ஏற்பு விழா 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வேற்றுக்கிரகவாசிகளை தேடும் முயற்சியில் சுவிஸ்

(ஜெனீவா)



சுவிட்சர்லாந்தை சேர்ந்த ஆய்வாளர்கள் வேறு கிரகங்களில் உயிர்கள் உள்ளனவா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி, வேற்றுக்கிரக வாசிகளை கண்டறிவதற்காக அவர்கள் புதிய கருவி ஒன்றையும் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நிலையில், ஜெனீவா மற்றும் Bern பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்படும் spectrograph என்னும்கருவி, சிலி நாட்டில் தற்போது கட்டப்பட்டு வரும் European Southern Observatory என்னும் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் நிறுவப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கருவி 120 மில்லியன் யூரோ செலவில் உருவாக்கப்படுகிறது.


இதேவேளை இந்தக் கருவி, வெவ்வேறு கிரகங்களின் வளிமண்டல வேதி கூட்டமைப்பைக் கண்டறிந்து, அந்தக் கிரகங்களில் உயிர்கள் வாழ்கின்றனவா என்பதற்கான அடையாளங்களைக் கண்டு பிடிக்கும் என கூறப்படுகிறது. மேலும், வெற்றுக்கிரக வாசிகளை தேடும் இந்த திட்டமானது, 2032 இல் முழுமை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-6)

# சுமார் 50 குழந்தைகளுடன் ஆற்றில் பாய்ந்த பேருந்து

(டமாஸ்கஸ்)

சிரியாவில் 50 இற்கும் மேற்பட்ட குழந்தைகளை ஏற்றிச் சென்ற பாடசாலைப் பேருந்து ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தில் டசின் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளதுடன், 20 குழந்தைகள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிரியாவின் டார்குஷ் அருகே ஓரோன்டெஸ் ஆற்றில் பாடசாலைப் பேருந்து விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.



சிரிய சிவில் டிஃபென்ஸ், தன்னார்வத் தொண்டர்கள் குழு, சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6)

# பறவைக் காய்ச்சலால் பதிவான முதல் மரணம்

(மெக்சிகோ)

மெக்சிகோவில் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் பறவைக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகவும், அவர் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.


அதன்படி, பறவைக் காய்ச்சலால் உலகில் பதிவான முதல் மனித மரணம் இதுவாகும்.

59 வயதான அந்த நபருக்கு எப்படி வைரஸ் தொற்று ஏற்பட்டது என்பது இதுவரை தெரியவில்லை.

இதனைத் தொடர்ந்து மெக்சிகோவின் ஏனைய மாநிலங்களிலும் பறவைக் காய்ச்சல் பரவல் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# விண்வெளி நிலையத்தில் குத்தாட்டம் போட்ட சுனிதா வில்லியம்ஸ் – வைரல் வீடியோ

(வோஷிங்டன்)



போயிங் நிறுவனம் வடிவமைத்த ஸ்டார் லைனர் விண்கலத்தில் நாசா விண்வெளி வீரர் புட்ச் வில்மோர், விண்வெளி வீராங்கனை சுனிதாவில்லியம்ஸ் ஆகியோரை சுமந்து கொண்டு விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையம் நோக்கி கடந்த புதன்கிழமை புறப்பட்டுச்சென்றது. 25 மணி நேர பயணத்திற்குப் பிறகு நேற்று முன்தினம் அவர்கள் விண் வெளி நிலையத்தை சென்றடைந்தனர். சுமார் ஒரு வாரம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி ஆய்வு மேற்கொண்டு ஜூலை 14ஆம் திகதி பூமிக்கு திரும்புகிறார்கள்.

இந்நிலையில் விண்வெளி நிலையத்தில் சுனிதாவில்லியம்ஸ் அந்தரத்தில் மிதந்தபடி நடமாடும் வீடியோவை போயிங் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அந்த வீடியோவில் தனது சகாக்களுடன் சுனிதா உற்சாகமாக காற்றில் தவழ்ந்தபடி நடனமாடுவது பதிவாகியுள்ளது. (நி-6)

# சூடானில் தீவிரமடையும் மோதல் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(கார்டோம்)

சூடானின் கெசிரா மாகாணத்தில் உள்ள வாத் அல்-நவுரா என்ற கிராமத்திற்குள் நேற்று ஆர்.எஸ்.எப். துணை இராணுவப் படையினர் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தாக்குதலுக்கு சூடான் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.




அதே சமயம் சூடான் இராணுவத்தினர் தங்கள் படைகளை தாக்க திட்டமிட்டதாகவும், அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் வாத் அல்-நவுரா கிராமத்தின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள இராணுவப் படைத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் ஆர்.எஸ்.எப் துணை இராணுவபடைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் இல்லையேல் போராட்டம் வெடிக்கும்

## எச்சரிக்கும் ஐ.தே.க



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க இல்லையேல் மீண்டும் அரகலய போராட்டம் வெடிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையின் தற்போதைய நிலைமையில் நாட்டை ஆளக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அவர் ஆட்சியில் தொடர வேண்டும்.அவர் இல்லையேல் மீண்டும் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடையும் எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் அவரை சகல தரப்பினரும் இணைந்து வெற்றியடையச் செய்ய வேண்டும்.

அரகலய போராட்டத்தின் விளைவாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றார். அவர் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும்.

அப்போதுதான் நாடு முன்னேறிச் செல்லும். சர்வ தேசமும் எமது நாட்டுக்கு உதவிகளை வழங்கும். ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை நம்பித்தான் சர்வ தேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்குகின்றது என்பதை நாட்டிலுள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். என அவர் தெரிவித்தார். (ந-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 250 | 350-400 | 460 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 100 | 100 | 200 |
| தக்காளி | 200 | 250 | 200 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 160 | 150 | 100-120 | 200 |
| கோவா | 300 | 260 | 250 | 200 | 300 |
| கரட் | 250 | 280 | 300 | 230 | 300 |
| பூசணி | 120 | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 200 | 180 | 200 | 130 | 300 |
| வாழைக்காய் | 100 | 130 | 100 | 100-120 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 250-300 | 300-450 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 250 | 250 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 500 | 800 |
| வெண்டக்காய் | 150 | 300 | 260 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 120 | 100 | 160 |
| பயற்றங்காய் | 450 | 300 | 100 | 200-250 | 350 |
| லீக்ஸ் | 480 | 500 | 350 | 350 | 600 |
| பீற்றூட் | 550 | 400 | 600 | 300 | 480 |
| கறிமிளகாய் | 550 | 500 | 200 | 480 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 600 | 300-450 | 800 |
| போஞ்சி | 600 | 600 | 600 | 350 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 180 | -- | 420 |
| கீரை - 1 பிடி | 60 | 140 | 100 | 100-130 | 120 |
| தேசிக்காய் | 800 | 800 | 1000 | 800-1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 160 | 200 | 200 | 90 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 180 | 120 | 120 | -- | 250 |

# இன்று ஒரு தகவல் 148



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## அறுவை சிகிச்சையில் ஒரு சாதனை

தருமம் தலை காக்கும் என்று சொல்லுவார்கள். 'ஒருவர் தர்மம் செய்தால் அது அவருடைய தலைமுறையையே காப்பாற்றும்' என்று அதற்கு விளக்கம் சொல்லுகிறவர்களும் உண்டு. அது ஒரு பக்கம் இருந்தாலும்,

தலை நமது உடம்பிலே மிகவும் முக்கியமான ஒரு பாகம். தலையைக் காப்பாற்றினால் உடம்பையே காப்பாற்றுவது மாதிரி. யாராவது அடிபட்டு மருத்துவமனைக்கு போனால் முதல் தலையிலே ஏதாவது அடிபட்டு இருக்கிறதா? என்று தான் கவனிப்பார்கள்.

தலையிலே அடிபடுபவர்களை உடனடியாக கவனிப்பதற்கு மருத்துவமனையிலே தனிப்பிரிவே இருக்கிறது.

அது இருக்கட்டும் இப்போது நான் சொல்ல வந்த விடயம் என்ன என்றால் "ஒருவருக்கு மண்டை ஓடு உடைந்து மூளையே கொஞ்சம் சிதறிப் போய்விட்டது. அந்த மனிதரை காப்பாற்றி இருக்கிறார்கள். இது ஒரு அதிசயமான விடயம். மருத்துவத்துறையிலே இது ஒரு பெரிய சாதனை தான் என்று சொல்ல வேண்டும்.

தென்அமெரிக்காவிலே பொலிவியா என்று ஒரு நாடு. அங்கே பாச்சோ என்று ஒரு இளைஞன். அவர் தன்னுடைய நண்பர் வீட்டுக்கு ஒரு நாள் போனார். போனவர் சும்மா இருக்க வேண்டியது தானே இல்லையே. அந்த நண்பனுடைய அப்பா ஒரு துப்பாக்கி வைத்து இருந்தாராம். அது கைத்துப்பாக்கி தான். அதை எடுத்து கையிலே வைத்துக் கொண்டு ஏதோ விஷமம் செய்து இருக்கிறார். உடனே அந்த துப்பாக்கியும் விஷமம் செய்து விட்டது. ஆமாம் வெடித்து விட்டது.

இந்த பையனோட இடது கண்ணுக்கு மேலே குண்டு பாய்ந்து விட்டது. மண்டையை துளைத்துக் கொண்டு போய் பின் பக்கமாக வெளியே போய்விட்டது. உடனே மருத்துவ மனைக்கு தூக்கிக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். அறுவை சிகிச்சை நடந்து இருக்கிறது.

ஆள் பிழைத்துக் கொண்டார். இருந்தாலும் அவரோட வலது பக்க உறுப்புக்கள் பக்கவாதத்தாலே பாதிக்கப்படும் என்றும் அவருக்கு பேச்சு வராது என்றும் டொக்டர்கள் சொல்லி விட்டார்கள். அவர் ஒரு இரண்டு மாதம் வரைக்கும் சுயநினைவே இல்லாமலே இருந்தார். அதன் பின்பு மெதுவாக நினைவு திரும்பி விட்டது. லேசாக நடமாடினார். திக்கித்திக்கிப் பேசினார். இடது கையாலே எழுதிப் பழக ஆரம்பித்தார்.

டொக்டர்களுக்கு கொஞ்சம் ஆச்சரியம் தான் ஏன் என்றால் அவர் மண்டையிலே காயம் ஆறிப்போய்விட்டதே தவிர மூளையைப் பாதுகாக்க மண்டை ஓடு இல்லை. ஓட்டுக்குப் பதிலாக அந்த இடத்திலே மெல்லியதாக தழும்புத் திசு மட்டும் இருந்ததுதாம். ஏதாவது கூராக உள்ள பொருள் தலையிலே விழுந்தால் அது உள்ளாற போய் விடும். உயிருக்கே ஆபத்து.

டொக்டர்கள் யோசனை செய்தார்கள். அந்த இடத்திலே ஒரு மண்டை ஓடு வைத்து விட்டால் நன்றாக இருக்குமே என்று நினைத்தார்கள். ஆனால் ஓட்டுக்கு எங்கே போவது. வீட்டுக்கு ஓடு மாற்றுவது என்றால் கடையிலே வாங்கி மாற்றி விடுகின்றோம். ஆனால் மனிதனுக்கு ஓடு மாற்றுவது என்றால் எந்தக் கடையிலே போய் ஓடு வாங்க முடியும். அது முடியாத காரியம்.

அந்த இளைஞரை அமெரிக்காவுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். தலையை எங்கேயும் இடித்துக் கொள்ளாமல்! மின்னிசோட்டா மாநிலத்திலே செயின்ட் பால் என்று ஒரு நகரம். அங்கே இரண்டு டொக்டர்கள். ஜோசப் ஸ்கோவ், ஃபிராங்க் பில்னே இவர்கள் இரண்டு பேரும் தான் அந்த அபூர்வ அறுவை சிகிச்சையை செய்து இருக்கிறார்கள். மண்டை ஓடு இல்லாத இடத்திலே புதிதாக எலும்புகளை வைத்து பொருத்தி விடுவோம் என்று முடிவு செய்தார்கள். அப்படி வைத்தால் அதை மூடுவதற்கு தோல் வேண்டுமே! அதற்கு எங்கே போவது. ஏற்கனவே மண்டையிலே இருக்கிற தோலை ஒரு விஷேட கருவி மூலமாக நல்லா இழுத்து நீட்டினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக இதை இழுத்து பெரிதாக்க மாதக் கணக்கிலே ஆகிவிட்டதாம்.

மண்டை ஓட்டிலே வலது பக்கத்திலே ஒரு பகுதியை வெட்டி எடுத்தார்கள். அதை குறுக்கே அறுத்து இரண்டு சில்லாக ஆக்கினார்கள். ஒரு சில்லை பழைய இடத்திலேயே வைத்து மூடினார்கள். இன்னொன்றை அடிபட்ட இடத்திலேயே வைத்து மூடினார்கள்.அது போதவில்லை. இன்னும் கொஞ்சம் தேவைப்பட்டது. Gap Filling! வலது விலா எலும்பிலேயிருந்து கொஞ்சம் எடுத்து அந்த இடத்திலே வைத்தார்கள். ஏற்கனவே நீட்டி வைத்திருந்த தோலை இடதுபக்க காது வரைக்கும் நன்றாக இழுத்து மூடி விட்டார்கள். அவ்வளவு தான். அவர் கொஞ்ச நாள் கழித்து மருத்துவமனையிலே இருந்துவிட்டு சௌக்கியமாக வீட்டுக்கு வந்துவிட்டார். வலது கைவிரல் மட்டும் மூடியபடியே இருக்குதாம். மற்றப்படி ஒன்றும் குறையே இல்லையாம்.

இந்த அளவுக்கு அடிபட்ட ஒருவர் இந்த அளவுக்கு முன்னேறி உயிரோடு இருக்கிறது பெரிய அதிசயம் தான் என்று டொக்டர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள். தருமம் தலைகாக்கும் என்பது மாதிரி மருத்துவ விஞ்ஞானம் தலைகாக்கும்!

"தருமம் தலை காக்கும் என்பதை நான் அனுபவ பூர்வமாக புரிந்து கொண்டேன் என்றார் ஒருவர்".'எப்படி'? என்று கேட்டார் இன்னொருத்தர்.

"நான் செய்த தருமம் தான் என் தலையைக் காப்பாற்றியிருக்கு!"என்றார்.

'கொஞ்சம் விபரமாக தான் சொல்லுங்கள்' என்றார் இவர்.

நேற்று இரவு ஒரு முகமூடி திருடன் எங்கள் வீட்டுக்கு வந்தான். ஒரு விறகு கட்டையை எடுத்துக் கொண்டு என் தலையிலே அடிக்க வந்தான். அதற்கு முன்னால் நான் என்னிடம் இருந்ததையெல்லாம் எடுத்து அவனிடம் தர்மம் செய்து விட்டேன்.அந்த தருமம் தான் என் தலையை காப்பாற்றியது என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடல், தரை வழி போக்குவரத்து தொடர்பான விசேட கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

கடல்வழி போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நேற்று ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும், வட மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீதிகள், புனரமைக்கப்பட வேண்டிய வீதிகள் , எதிர்கால திட்ட முன்மொழிவுகள், ரயில் போக்குவரத்து, கடல்வழி போக்குவரத்துச் செயற்பாடுகள், வடக்கு மாகாண போக்குவரத்துத்துறையில் காணப்படும் சிக்கல்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதனூடாக பொருளாதார அபிவிருத்திகளை அடைய முடியும் எனவும், சுற்றுலாத்துறைசார் விடயங்களை மையப்படுத்தி போக்குவரத்து சேவை விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் போககுவரததுத்துறையை விஸ்தரிப்பது தொடர்பில் கேட்டறிந்து கொண்ட மத்திய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், கடல்வழி போக்குவரத்தின் அவசியம் மற்றும் தேவை தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

அத்துடன் எதிர்வரும் ஒன்றரை மாதங்களுக்குள் தண்டவாள புனரமைப்பு நிறைவு செய்யப்பட்டு, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான நேரடி ரயில் சேவை மீள ஆரம்பிக்கப்படும் எனவும் போக்குவரத்துத் துறையை மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பதாக அவர் தெரிவித்தார். (நி-6)

## உயர்தர பரீட்சை பெறுபேறுகள்-2023

### கிளி/பளை மத்திய கல்லூரி

**உயிரியல் பிரிவு**

லோ.துவாரகா- 3ஏ,சி.வினுஜா-ஏபிசி, கௌ.தமிழிசை-2பிசி, ச.தர்சிகன்-2பிசி.

**பௌதீக விஞ்ஞானப்பிரிவு**

பா.சாரங்கன்-2ஏபி, கோ.வினுசியா-ஏ2பி.

**பொறியியல் தொழில்நுட்ப பிரிவு**

தி.றொனால்ட்-2பிசி

**வணிகப் பிரிவு**

பி.நிறைவாணன்-ஏ2பி, ந.பானுப்பிரியன்-2ஏசி, ம.மதனிகா-ஏபிசி, ப.விதுசா-3பி, செ.தமிழினி-3பி, த.ஜனோருத்சிகா-2பிசி, இ.இமேல்டா-ஏபிசி, இ.மேரிமிசா-2பிசி.

**கலைப்பிரிவு**

சி.றொன்சிகா-3ஏ, ஆ.மதுசா-2ஏபி, ச.இசையரசி-ஏ2பி, மா.தேனுசன்-2ஏபி, ரா.துசிகா-ஏ2பி, இ.கஜீத்தினா-ஏபிசி.

# ட்ரக்டர்-மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பகுதியில் ட்ரக்டர்-மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று இடம் பெற்றுள்ளது.

யாழ்.பருத்தித்துறை வீதி வழியாகப் பயணித்த மோட்டார் சைக்கிளும், கோப்பாய் பக்கத்திலிருந்து வருகை தந்த ட்ரக்டர் மோதியே இவ் விபத்து சம்பவித்துள்ளது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3138

கபிலா




வைபவ்




விசால்




விஜி




ராகவி




சாகித்தியன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 502





ஆனால் நடுக்கடலில், ஈழத்துக்கும் கோடிக்கரைக்கும் நடுவில், இரு கப்பல்கள் தத்தளித்ததாகவும், அவற்றில் ஒன்று தீப்பற்றி எரிந்து முழுகியதாகவும் கட்டு மரங்களில் மீன் பிடிக்கச் சென்றிருந்த வலைஞர்கள் சிலர் கூறினார்கள். இது பழுவேட்டரையருக்கு மிக்க கவலையை உண்டாக்கிற்று. அந்த இரண்டு மரக்கலங்களும் இளவரசரைச் சிறைப் பிடித்து வந்த கப்பல்களாயிருக்கலாம் அல்லவா? அப்படியானால் இளவரசரின் கதியாதாகியிருக்குமோ? இளவரசருக்கு ஏதேனும் நேர்ந்திருந்தால் தனக்குப் பெரும் பழி ஏற்படுமே? சோழ நாட்டு மக்களின் எல்லையற்ற அன்பைக் கவரந்தவராயிற்றே, அருள்மொழி வர்மர். மக்களுக்கு அவரைப் பற்றி என்ன சொல்வது? சக்கரவர்த்திக்குத்தான் என்ன சமாதானத்தைக் சொல்வது? நிச்சயமான செய்தி தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் பேராவல் அவருக்கு உண்டாயிற்று. கோடிக்கரைக்குப் போனால் ஒரு வேளை விவரம் தெரியலாம். மூழ்கிய கப்பலை நன்றாய்ப் பார்த்தவர்கள் அங்கே இருக்கக்கூடும். மூழ்கிய கப்பலிலிருந்து தப்பியவர்கள் யாரேனும் கரை சேர்ந்திருக்கவும் கூடும். ஆம் உடனே கோடிக்கரைக்குப் போக வேண்டியதுதான்!

இந்த எண்ணத்தை நந்தினியிடம் வெளியிட்டதும் அவள் ஆர்வத்துடன் அதை ஒப்புக்கொண்டாள். "கோடிக்கரையை நான் இதுவரையில் பார்த்ததில்லை. அந்தப் பிரதேசம் மிக அழகாயிருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் அதையும் பார்த்துவிடலாம்" என்றாள் நந்தினி.

நாகைப்பட்டினத்திலிருந்து கோடிக்கரைக்கு இரண்டு வழிகள் உண்டு. கடற்கரையோரமாகச் சென்ற கால்வாய் வழியாகப் படகில் ஏறிப் போகலாம். அல்லது சாலை வழியாகவும் போகலாம். பழுவேட்டரையரின் பரிவாரங்கள் அதிகமாயிருந்தபடியால் சாலை வழியாகவே போனார்கள். மேலும் நந்தினி கால்வாய் வழியை விரும்பவும் இல்லை. கால்வாயில் படகில் போனால் பழுவேட்டரையர் தம் காதல் புராணத்தைத் தொடங்கி விடுவார் என்று நந்தினி அஞ்சியது ஒரு காரணம். அது மட்டும் அன்று, சாலை வழியாகச் சென்றால் கடற்கரையோரத்தில் வந்து ஒதுங்கும் கட்டுமரக்காரர்களையும் படகோட்டிகளையும் விசாரித்துக்கொண்டு போகலாம் அல்லவா?

வழியில் அப்படி விசாரித்ததில் புதிய செய்தி ஒன்றும் தெரியவில்லை. நடுக்கடலில் சுழிக்காற்றுப் பலமாக அடித்த சமயம் கப்பல் ஒன்று தீப்பட்டு எரிந்ததைப் பார்த்ததாக மட்டும் இன்னும் சிலரும் கூறினார்கள். கோடிக்கரையை அடைந்ததும் கலங்கரை விளக்கத்தின் காவலர் தியாக விடங்கர் தமது எளிய வீட்டைப் பழுவேட்டரையர் தம்பதிகளுக்காக ஒழித்துக் கொடுப்பதாகச் சொன்னார். அதை ஏற்கும்படி மன்றாடிக் கேட்டுக்கொண்டார். கோடிக்கரையில் தங்குவதற்கு வேறு மாட மாளிகை கிடையாது. எனினும் நந்தினி அதை மறுத்துவிட்டாள். கலங்கரை விளக்கிற்கு அருகில் கூடாரம் போட்டுக் கொண்டு தங்க விரும்புவதாகக் கூறினாள்.

அவ்வாறே கூடாரங்கள் அடிக்கப்பட்டன. சற்றுத் தூரத்தில் ஆங்காங்கு பழுவூர்ப் பரிவாரங்களுக்கும் கூடாரங்கள் போடப்பட்டன. கூடாரங்கள் அடித்து முடித்தவுடனே கடலில் ஒரு பெரிய மரக்கலம் காணப்பட்டது. அது கரையோரமாக எவ்வளவு தூரம் வரலாமோ அவ்வளவு தூரத்தில் வந்து நின்றது.

அதைக் கண்டதும், பழுவேட்டரையரின் பரபரப்பு மிகுந்தது. கப்பலின் பாய் மரங்கள் சின்னாப்பின்னமாகியிருந்ததிலிருந்து அது சுழிக்காற்றில் அகப்பட்டிருக்க வேண்டுமென்று தெளிவாயிற்று. அதில் இருப்பவர்கள் யார்? ஒரு வேளை இளவரசராயிருக்கலாமோ? புலிக்கொடி காணப்படாததில் வியப்பில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தலைக்கணம்



இங்கிலாந்தில் வாழ்ந்த மன்னன் கானுட். இவர் பல நாடுகளை வென்று ஒரு பெரிய ராஜாங்கத்தையே தனக்கு கீழ் நிறுவினார். அதனால் இவருக்கு பெரிய அரியாசனம் கொடுத்து இவரை பெருமையாக பேச ஆரம்பித்தார்கள்.

இவர் அரியாசனம் செல்லும் இடங்கள் எல்லாம் மன்னரை எதிர்க்க ஆள் இல்லாமல் போக ஆரம்பித்தது. அரசரை எதிர்க்க ஆளில்லை என்று பெயர் ஊரெல்லாம் பரவ ஆரம்பித்தது. இந்த பெயரால் அரசரின் உடன் இருந்தவர்கள் அவரின் புகழை பாட பாட கானுட் மன்னனுக்கு தலைக்கனம் ஏற ஆரம்பித்தது. தன்னை எதிர்க்க யாராலும் முடியாது என்ற எண்ணம் அதிகமான கானுட் மன்னன் ஒருநாள் திரண்டு வரும் கடல் அலை கூட என் அரியாசனத்தை பார்த்தால் நின்று விடும் என சொல்ல சிலர் அவரை உங்களால் முடியும் என்று உசுப்பேத்த அவரும் அரியாசனத்தை தூக்கி கொண்டு கடலுக்கு சென்றார். கடல் அலை முன்னால் தனது அரியணையை எடுத்து வைத்தார். கடலுக்கும் அவர் அரியணைக்கும் இடைவெளி இருக்க அவர் கடல் அலையை பார்த்து நில் என சத்தமாக கத்தினார். கடல் அலை மெதுவாக அடிக்கவும் அரசரும் அவர் அருகில் இருந்தவர்கள் முகத்தில் சந்தோசம் பொங்கியது.

உடனே குஷியான கானுட் மன்னன் இன்னும் சத்தமாக கடல் அலையே நில் என்று சொல்ல கடலும் அதே போல அமைதியாக வீச இப்போது நின்று விடும் என நம்பினார் அரசர். கடல் அலை சொன்னது போல நிக்குமா என யோசித்து கொண்டே கானுட் மன்னனை பார்த்தார்கள்.

அவர் அகோரக்ஷமாக இன்னும் கடலை பார்த்து கத்த கடல் அலை அடிக்கவில்லை. அவ்வளவுதான் எல்லோரும் சந்தோஷத்தில் குதிக்க, மன்னரின் புகழை பாட ஆரம்பித்தார்கள். மன்னனுக்கும் தன்னால் தான் கடல் அலை வீசவில்லை என்று தோன்ற ஆரம்பித்தது. சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் கடல் அலை சுழட்டி பெரிய அலையாக அடிக்க அரசரின் அரியனையோடு தூக்கி வீசியது. யாரும் இதை எதிர்பார்க்கவில்லை.

அரசரின் தலையில் இருந்த தங்க கிரீடம் அலையில் அடித்து கீழே விழ, அவரால் அதை மற்றவர்கள் முன்னாள் நிமிர்ந்து பார்க்க முடியாமல் போனது. இப்போது தான் கானுட் மன்னனுக்கு புரிந்தது. நம்மால் எதையுமே நிறுத்த முடியாது, முக்கியமாக இயற்கையை எதிர்த்து எதுவுமே செய்ய முடியாது என்பதை உணர்ந்தார். அதன் பிறகு அவரால் அரியணையில் ஏறி அமர மனம் வரவில்லை. மக்களுக்கும் மற்ற ராஜ்ஜியத்திற்கும் அவர் செய்த செயல்கள் அவரை அரியணையில் மீண்டும் அமரவிடாமல் தடுத்தது.

இவர் செய்த செயல் நாடெங்கும் பரவியது. கானுட் மன்னனின் தலைக்கனம் நீங்கியது. மீண்டும் அரியணை என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல் மனம் மாறினான்.

இருந்தாலும் இவன் கடல் அலையை நிறுத்த போவதாக கூறியது சரித்திரத்தில் இடம் பிடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியபடி செய்வது கடினமல்ல; மிக எளிது. ஆனால் அதற்கு முன் சொல்லும்பொழுது யோசித்துச் சொல்லப் பழகிக்கொள். ~ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சஜித் பிரேமதாஸவின் வெளிப்படைத்தன்மை

நான் ஜனாதிபதியாகத் தெரிவானால் இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்காத வகையில், தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்கத் தயாராக இருக்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார் என்பதற்காக, அவர் எங்களுக்குத் தீர்வு தரப் போகிறார் என்று நாம் ஒருபோதும் கூறவில்லை.

இப்படி எத்தனையோ பேர் கூறிவிட்டார்கள். அவ்வாறு கூறியவர்கள் எதனையும் தரவில்லை என்பதுதான் கடந்த கால அனுபவம்.

ஆனால் நாம் இங்கு கூறவருவது,

நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பில்லாமல் தமிழ் மக்கள் விரும்புகின்ற தீர்வை வழங்குவேன் என சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகக் கூறியிருப்பதையே.

அதாவது, கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் தரப்பினர் சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன போன்றவர்களை ஆதரித்ததுண்டு.

அதேநேரம் நாங்கள் வெற்றி பெற்றால், தமிழ் மக்களுக்குத் தீர்வு தருவோம் என்று அவர்கள் பகிரங்கமாகக் கூறவில்லை.

அவ்வாறு கூறினால், சிங்கள மக்கள் தமக்கு வாக்களிக்க மாட்டார்கள். ஆகையால் அவ்வாறு பகிரங்கமாகக் கூறமுடியாது எனத் தமிழ்த் தரப்பினருக்கு இரகசியமாகக் கூறி வைத்தனர்.

இதில் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறவில்லையாயினும் தமிழ்த் தரப்பு ஆதரித்த மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்.

இருந்தும் அவர் தமிழ் மக்களுக்கு எதனையும் தரவில்லை என்பது தெரிந்த விடயம்.

இங்கு மைத்திரிபால சிறிசேனவுக்குத் தமிழ்த் தரப்பு ஆதரவு வழங்கியபோது, சில நிபந்தனைகளை உடன்பாடாக்கி அதில் கைச்சாத்திட்டிருக்க வேண்டும்.

ஆனால் தமிழர் தரப்பு அதனைச் செய்யத் தவறியதன் காரணமாக மைத்திரிபால சிறிசேன எங்களை ஏமாற்றிவிட்டார் எனக் குற்றம் சாட்டுபவர்களும் உளர்.

இங்குதான் மேற்போந்தவர்களுடன் ஒப்பிடும்போது, சஜித் பிரேமதாஸவிடம் வெளிப்படைத்தன்மை இருப்பது தெரிகிறது.

ஆம், தமிழர்களின் தீர்வு பற்றி எதுவும் பேசாமல், அதே நேரம் தமிழ் அரசியல் தரப்புகளை வசப்படுத்தி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுகின்ற கடைநோக்கம் இல்லாமல் "நான் ஜனாதிபதியாக வந்தால், நாட்டின் இறையாண்மைக்குப் பங்கம் இல்லாமல் தமிழ் மக்கள் விரும்புகின்ற தீர்வை வழங்குவேன்" என சிங்கள மக்களும் அறியும் வகையில் சஜித் பிரேமதாஸ வெளிப்படையாகக் கூறியிருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

# வங்குரோத்து நிலையிலிருந்து நாடு விரைவில் விடுபடும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தை சமர்ப்பித்து நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதைக்குத் திருப்புவதற்கான முதல் அடி வைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜா-எல ஏக்கல பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் Cephalosporin ஊசி மற்றும் மெல்டோல் மருந்து உற்பத்தி தொழிற்சாலையினைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅவர்மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்னும் சில மாதங்களில் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடும். சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்கிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறோம். ஆனால், இதனால் மட்டும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டாது.

ஒரே இடத்தில் இருந்தால் நாம் மீண்டும் வீழ்ந்துவிடுவோம்.

அதனால் முன்னோக்கிச் செல்ல வேண்டும். நாம் முன்னோக்கிச் செல்வதற்காக போலி வாக்குறுதிகளை வழங்கக்கூடாது. தற்போது அரசாங்கம் பொருளாதார மறுசீரமைப்புச் சட்டத்தை சமர்ப்பித்துள்ளது. அதற்குள் பல இலக்குகள் உள்ளன.

2027 ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 5 வீதமாக காணப்பட வேண்டும்.

இதுவரையில் பொருளாதார வளர்ச்சி மறைப் பெறுமானத்திலேயே காணப்படுகிறது. அதனால் 2027 இற்குப் பின்னர் 8 வீத வளர்ச்சியை நோக்கி நகர வேண்டிய தேவையும் உள்ளது.

நாடு அபிவிருத்தி அடையும் போது 15 வருடங்களுக்கு 8 வீத பொருளாதார வளர்ச்சியை தக்க வைத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். நாட்டின் தொழில் இன்மை பிரச்சினையை 2025 ஆம் ஆண்டளவில் 5 வீதமாக மட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், எந்த தலைவர் நாட்டை பொறுப்பேற்றாலும் அந்த இலக்குகளை நோக்கி நகர வேண்டியது அவசியம். அதனால் பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கான முதல் அடியை வைத்திருக்கிறோம்.

அடுத்த இரண்டு,மூன்று வருடங்களில் நாட்டின் இளையோருக்கு நல்ல நாடு குறித்த எதிர்பார்ப்பை ஏற்படுத்துவோம் இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7,10)

# முல்லை புல்மோட்டையில் 4 வயது சிறுமி மீது தாக்குதல்

## ஜனாதிபதி கண்டனம்

முல்லைத்தீவு புல்மோட்டை, அரிசிமலை பிரதேசத்தில் 4 வயது சிறுமியொருவர் கொடூரமாகத் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் உறுதியளித்துள்ளார்.

முல்லைத்தீவு புல்மோட்டை, அரிசிமலை பகுதியில் 4 வயதுடைய சிறுமியொருவரை, நபர் ஒருவர் கொடூரமாக தாக்கும் காணொளி சமூக ஊடகங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்தையடுத்து, குறித்த 45 வயதுடைய நபர் ஒருவரும், அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய இரண்டு பெண்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்த சம்பவத்திற்கு தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் கண்டனம் வெளியிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாதிக்கப்பட்ட குழந்தையின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் இதற்கு அரச அதிகாரிகளிடமிருந்து விரைவான மற்றும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நான்கு வயது சிறுமி கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவம் நாட்டையே அதிர்ச்சியடைய செய்துள்ளதுடன், நீதித்துறை செயல்முறையின் ஊடாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் என்ற ரீதியில் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உடனடி ஆதரவை வழங்குவதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். இதுபோன்ற துஷ்பிரயோகம் குழந்தைகளுக்கு நீடித்த பாதிப்பை எடுத்துக் காட்டுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, இன்றைய சிறுவர்கள் இல்லாமல் நாளை இல்லை என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் அவர்களின் நலனுக்கே உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தனது எக்ஸ் தள பதிவில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,10)

# போலி முறைப்பாடு

## யுவதிக்கு சிறைத்தண்டனை

தான் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக பொய்யான முறைப்பாடு செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட முறைப்பாட்டாளருக்கு ஒரு மாத கட்டாய சிறைத்தண்டனையை நீதவான் ரந்திக லக்மால் ஜயலத் விதித்துள்ளார்.

உயர்கல்விகற்கும் பன்னல பிரதேசத்தில் வசிக்கும் யுவதி ஒருவரே இவ்வாறு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளான தனஞ்சனி பஸ்நாயக்க மற்றும் சுகந்திகா முன்னிலையில் தான் ஒருவரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக யுவதி அளித்த வாக்குமூலத்திற்கமைய, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், இருவரும் நீண்ட நாட்களாக காதல் தொடர்பில் இருந்ததாக தெரியவந்ததையடுத்து, குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்து பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

காதலனுடன் தனிமையில் இருந்தமை வீட்டுக்கு தெரிய வந்த நிலையில், அதிலிருந்து தப்பிக்க போலி முறைப்பாடு மற்றும் தகவல்கள் யுவதி வழங்கியதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதற்கமைய, போலி முறைப்பாடு செய்த யுவதிக்கு ஒரு மாத கட்டாய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# ரயில் சாரதிகள் பகிஷ்கரிப்பு ரயில் சேவைகள் பாதிப்பு

(கொழும்பு)

ரயில் சாரதிகள் நேற்று முன்தினம் (06) நள்ளிரவு முதல் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பின் இரண்டு பிரதான ரயில் நிலையங்களிலிருந்து ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டதென தொழிற்சங்கத்தின் செயலாளர் S.R.C.M. சேனாநாயக்க தெரிவித்தார்.

பதவி உயர்வு வழங்கப்படாமை, ஆட்சேர்ப்பில் நிலவும் தாமதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு கோரி இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளனர்.

இதனிடையே, குருநாகல் ரயில் நிலையத்தின் ஊடாக பயணிக்கும் அலுவலக ரயில்கள் வழமை போன்று இயங்கியது.

எனினும், ரயில் சாரதிகள் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பினால் குறுந்தூர ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

சில ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் M.J. இந்தி பொலகே தெரிவித்தார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

09

பதினைந்து ஆண்டுகளாகக் கல்வித் துறையில் ஏற்பட்ட அனுபவத்தின் பயனாக, கிராமியப் பிள்ளைகளின் கல்விக்குத் தாய் மொழியே சிறந்த சாதனமெனும் உண்மையைப் பாடசாலைச் சபை கண்டுணர்ந்தது. இதன் விளைவாக 1847 இல் சிங்கள, தமிழ் மொழிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன, ஆனால் கோப்பிச் செய்கையில் ஏற்பட்ட மந்த நிலையின் காரணமாக அரசாங்க வருமானம் குறையவே, கல்விக்கென ஒதுக்கப்பட்ட பணம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. புதுத்திட்டம் முன்னேற்றமடையும் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன.

கோல்புறுக் சிபார்சுகளின் அடிச்சுவட்டில் உருவாகிய புதுக் கல்வித்திட்டத்தின் பயனாக நன்மைகள் பல ஏற்பட்டன. அன்று ஆரம்பித்த ஆங்கிலக் கல்வி முறை, இலங்கை வாழ் இளைஞர்களை மேற்கத்தேய உலகின் கலாசாரத்துடன் நேர்முகமாகவும் அந்நியோன்னியமாகவும் தொடர்பு கொள்ளச் செய்தது. ஐரோப்பியக் கலைகளையும் விஞ்ஞானப் புதுமைகளையும் ஆங்கில மொழியின் மூலம் கற்றறிந்த அவர்கள், புது வழிகளில் சிந்திக்கவும் செயலாற்றவும் தொடங்கினர்.

ஐரோப்பிய சரித்திரத்தைப் படித்த அவர்கள், பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துக்களிலும் மார்க்சிசிய போதனைகளிலும் புது இலட்சியங்களைக் கண்டனர். ஆங்கில சரித்திரத்தில், மத்திய வகுப்பினர் எவ்விதம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றினரெனக் கற்றறிந்து உணர்ந்தனர். நாளடைவில் தம் நாட்டிலும் அப்பேர்ப்பட்ட சீர்திருத்தங்களுக்காக வாதாட ஆரம்பித்தனர்.

### 1833 ஆம் ஆண்டுக்குப் பின் நீதி நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றம்

அரசியல் நிர்வாகம், மாகாண பரிபாலனம், கல்வி என்னும் பல துறைகளில் புது இயக்கங்களை ஆரம்பித்து வைத்த 1833 ஆம் ஆண்டு, நீதி பரிபாலனத்துறையிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாக அமைந்தது. அவ்வாண்டு ஜூலை 31 இல், புது நீதிப்பட்டயம் பிரகடணம் செய்யப்பட்டது. அதற்கிணங்க உச்ச நீதிமன்றம் திறக்கப்பட்டு, சேர். சாள்ஸ் மாஷல் இலங்கையின் பிரதம நீதியரசராகச் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றர்.

அதனுடன் கமரன் செய்த சிபார்சுகளுக்கிணங்க இலங்கை எங்கும் ஒரே வகையான நீதி பரிபாலனமுறை ஏற்படுத்தப்பட்டது. குடியியல், பாதகவியல் அதிகாரங்களுடைய மாவட்ட நீதி மன்றங்கள், தீவின் பிரதான நகரங்களில் நிறுவப்பட்டன.

1845 இல் சிறு பாதகவியல் வழக்குகளை விசாரணை செய்வதற்கும், மாவட்ட மன்றங்களின் வேலைகளைக் குறைப்பதற்குமாக பொலிஸ் மன்றுகள் நிறுவப்பட்டன. 1848 இல் முறையீட்டு மன்றுகள் சிறு குடியியல் வழக்குகளை விசாரணை செய்வதற்கென நிறுவப்பட்டன.

### இலங்கையில் பத்திரிகைத் துறை வளர்ச்சியின் ஆரம்பம்

பிரித்தானியர் ஆட்சியின் முதல் முப்பது ஆண்டுகளில் இலங்கையில் பத்திரிகைகள் என்று அழைக்கக் கூடிய வெளியீடுகள் ஒன்றுமிருக்கவில்லை. 1802 ஆம் ஆண்டு தொடக்கம் "அரசாங்க கசற்" ஒன்று தான் அக்காலத்தின் புதினப் பத்திரிகையாகும். பிரதானமாக அரசாங்க அறிவித்தல்களையும், தகவல்களையும் கொண்டு வெளிவந்ததுடன் அது புதன், சனி, என்ற இரு நாள்களில் முக்கியமான உள் வெளிநாட்டு விடயங்களையும் ஆங்கில, இந்தியப் பத்திரிகைகளினின்று தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்களின் சுருக்கங்களையும் கொண்டு வெளிவந்தது.

ஆள்பதி ஹோட்டனின் காலத்தில்தான், பத்திரிகைகள் முதன் முதலாக இலங்கையில் காட்சியளித்தன. அவர் வந்த மூன்று மாதங்களுள் அரசாங்க ஆணையின் கீழ் "கொழும்பு ஜேணல்" என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். 1832 ஜனவரி முதலாம் நாளன்று அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்த இப்பத்திரிகை, மிகவும் குறுகிய காலத்துக்கே உயிர்வாழ முடிந்தது. பிரித்தானிய அரசாங்கம் 1833 டிசம்பர் 31 இல் அப்பத்திரிகை நடைபெறுவதைத் தடுத்து நிறுத்தி விட்டது.

கொழும்பின் பிரித்தானிய வணிகர் சிலர் ஒன்று சேர்ந்து இலங்கையின் முதல் சுதந்திரப் பத்திரிகையை பிரசுரிக்க ஆரம்பித்தனர். "ஒப்சேவர் அன்ட் கொமேஷல் அட்வட்டைசர்' 1834 இல் வெளிவந்தது. 1834 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி முதன் முதலில் வெளியிடப்பட்ட இந்தப் பத்திரிகையின் ஆசிரியர்கள் ஈ.ஜே. டார்லி மற்றும் ஜார்ஜ் வின்டர் ஆகியோராவார்.

அதே ஆண்டில் பொலிஸ் அதிகாரியை விமர்சித்ததற்காக இந்தப் பத்திரிகை மீது அவதூறு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. ஆனால் அந்த வழக்கு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. 1873 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் நாளிதழாக மாறியது. இன்றும் இலங்கையில் ஒப்சேவர் என்ற நாமத்துடன் பிரசுரமாகும் இப்பத்திரிகை தான், ஆசியாவின் மிகப்பழமை வாய்ந்த இரண்டாவது ஆங்கிலப் பத்திரிகையாகும்.

1835 இல் கிறிஸ்தோப்பர் எலியட் ஆசிரியராக அமைந்தது முதல், ஒப்சேவர், அரசாங்கத்தை மிகவும் வன்மையாகக் கண்டிக்கத் தலைப்பட்டது. அக்கண்டனங்களினின்று நிர்வாக அதிகாரிகளைப் பாதுகாக்க வேண்டுமென உணர்ந்த குடியியல் அதிகாரிகள், ஆள்பதியின் ஆதரவுடன் "சிலோன் குறொனிக்கல்" என்ற பத்திரிகையை 1837 மே 3 இல் முதன் முதலாக வெளியிட்டனர்.

ஆனால் அவ்வதிகாரிகள் மத்தியில் எழுந்த வேற்றுமைகளின் பயனாக 1838 செப்ரம்பர் 3 இல் வெளிவந்த பத்திரிகையுடன் அப்பத்திரிகை கைவிடப்பட்டது. இக்கால கட்டத்தில் ஒப்சேவர் பத்திரிகையின் கொள்கை முற்றிலும் நிலைமாறியது. அது அரசுக்கு சார்பாக மாறியது.

"குறொனிக்கல்" விற்பனையான பொழுது அதன் எந்திரங்களை வாங்கிய மக்கன்சி றொஸ் என்பவர் 1838 செப்டெம்பர் 7 இல் "சிலோன் ஹெரல்ட்" எனும் புதுப்பத்திரிகையொன்றினை ஆரம்பித்தார். அரசாங்கத்தை ஆதரித்த ஒப்சேவருக்குப் போட்டியாக ஹெரல்ட் அரசாங்கத்தைக் கண்டிப்பதையே தனது முதன்மையான வேலையாகக் கொண்டது.

1845 இல் சில பிரித்தானிய வர்த்தகர்கள் "சிலோன் ஹெரல்ட் ஐ வாங்கி அதற்கு "ரைம்ஸ் ஒப் சிலோன்" என நாமஞ் சூட்டினர். அப்பத்திரிகையின் முதலிதழ் 1846 ஜூலை 11 இல் பிரிசுரிக்கப்பட்டது. இதற்குச்சற்று முன்னதாக 1846 ஜனவரியில் "சிலோன் எக்ஸாமினர்" என்ற ஒரு பத்திரிகையைப் பறங்கியர் ஆரம்பித்தனர். அதில் பல எழுத்தாளர்கள் கட்டுரைகளையும் அபிப்பிராயங்களையும் எழுதிப் பிரபல்யமும் புகழும் ஈட்டினர். இவ்விதமாக 1850 அளவில் வாசகர்களின் ஆதரவைப் பெறுவதற்காக ஒப்சேவர், ரைம்ஸ், எக்ஸாமினர் எனும் மூன்று பத்திரிகைகள் ஒன்றேடொன்று போட்டியிட்டுவந்தன.

### ரைம்ஸ் ஒப் சிலோன் வரலாறு

இது முதன் முதலில் 1846 ஆம் ஆண்டில் சிலோன் ரைம்ஸ் என்ற பெயரில் வெளிவந்தது. இதன் வெளியீடு 1985 இல் நிறுத்தப்பட்டது. சிலோன் ரைம்ஸ் செய்தி இதழ் 1846 ஜூலை 11 இல் செயலிழந்த த சிலோன் ஹெரல்ட் அச்சகத்தில் வில்சன், ரிச்சி நிறுவனத்தினரால் தொடங்கப்பட்டது. தி ஒப்சர்வர் பத்திரிகைக்குப் போட்டியாகவும், பிரித்தானியக் குடியேற்றங்களின் வணிக நலன்களை மேம்படுத்துவதற்காகவும் இந்த செய்தித்தாள் தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டும் இது வெளியிடப்பட்டது.

1858 இல் இப்பத்திரிகை நிறுவனத்தை இலண்டனின் "த குளோப்" பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஜோன் கேப்பர் விலைக்கு வாங்கினார். கேப்பர் 1874 ஆம் ஆண்டில், அலெக்சாண்டர் அலார்டைசுக்கு விற்றுவிட்டு பிரித்தானியா திரும்பினார். புதிய உரிமையாளர்களின் கீழ் பத்திரிகையின் முக்கியத்துவம் குறைந்து, அது கலைக்கப்பட்டது.

கேப்பர் மீண்டும் இலங்கை திரும்பி அப்புத்தளையைச் சேர்ந்த கோப்பித் தோட்ட உரிமையாளரான அவரது மகன் பிராங்க் ஏ. கேப்பரின் உதவியுடன், 1882 ஆம் ஆண்டில் பத்திரிகையை மீண்டும் வாங்கி தி டைம்ஸ் ஒஃப் சிலோன் என்ற பெயரில் வெளியிட்டார்.

கேப்பரின் மூத்த மகன் எர்பர்ட் எச். கேப்பரும் இந்த பத்திரிகையுடன் இணைந்தார். இந்த செய்திப்பத்திரிகை மீண்டும் வளரத் தொடங்கியது, பெருந்தோட்ட உரிமையாளர்களாலும் ஐரோப்பியக் குடியிருப்பாளர்களாலும் படிக்கப்படும் முன்னணிச் செய்தித்தாள் ஆனது.

இவ்விதழ் 1883 இல் மாலை இதழாக வெளியிடப்பட்டது. ஜோன் கேப்பர் பத்திரிகையின் நிர்வாகத்தை அவரது இரண்டு மகன்களிடம் விட்டுவிட்டு, 1884 இல் இலங்கையில் இருந்து வெளியேறினார்.

1903 இல், ஆறுமுகம் சங்கரப்பிள்ளை என்பவர் இப்பத்திரிகையின் தனி உரிமையாளராக ஆனார், பின்னர் அவரது மகன் நிர்வாக இயக்குநரானார்.

ரைம்ஸ் நிறுவனமும் அதன் போட்டியாளரான அசோசியேட்டட் நியூஸ்சுபேப்பர்ஸ் ஒஃப் சிலோன் ஆகியவை 1948இல் பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை விடுதலை பெற்றபோது செய்தித்தாள் துறையில் ஆதிக்கம் செலுத்தின. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனங்கள்...

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இவற்றில் 38,144 மோட்டார் சைக்கிள்களும் 6286 கார்களும் உள்ளடங்குவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

உள்நாட்டு மோட்டார் வாகன உற்பத்தியாளர்களுடன் நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே நிதி இராஜாங்க அமைச்சர் இதனை குறிப்பிட்டார்.

வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குதல் தொடர்பிலும் இந்த கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (ம-7,10)

## 21 வயதில்...

பையும்,

27 வயதில் கலாநிதி பட்டத்தையும் பூர்த்தி செய்யும் வகையில், மாணவர்கள் கல்வி உரிமையை உறுதி செய்வதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜூலை மாத இறுதியில், சகல பாடப்பிரிவுகளும் கொண்ட சகல பாடசாலைகளும் இணைக்கப்பட்டு, தகவல் தொழில் நுட்ப வலயம் அமைக்கப்பட்டு டிஜிட்டல் மயமாக்கப்படும்.

தொழிற்சங்க நடவடிக்கைகளால் ஆசிரியர்கள் சுகயீனமுற்றாலும், குழந்தைகள் சுகயீனம் அடைய மாட்டார்கள்.

கல்விப் பொதுத்தரா தரப்பரீட்சை முடி வடைந்தவுடன் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கும்சவாலான பணியை ஆரம்பித்துள்ளோம்.

பரீட்சை முடிவுகள் காலதாமதமாவதால், கல்வியை இழக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மாணவர்களுக்காகவே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## ஜனாதிபதித்...

களில் உள்ள சகல தரப்பினரதும் கருத்துக்களை பெற்றதன் பின்னரே தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## இதய அதிர்வு...

கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரால் நேற்று கையளிக்கப்பட்டது.

போதனா வைத்தியசாலையின் தாதியர் பயிற்சி மண்டபத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது “கனடா செந்தில் குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் குறித்த இயந்திரம் வைத்தியசாலை பணிப்பாளரிடம் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட கனேடிய உயர்ஸ்தானிகர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அருங்காட்சியகத்தை பார்வையிட்டதுடன், வைத்தியசாலை வளாகத்தினுள் நினைவுச் சின்னமாக மரக்கன்று ஒன்றினையும் நாட்டி வைத்தார்.

நிகழ்வில், பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் “எரிக் வாஸ்” கலந்து கொண்டு வைத்திய உதவிப் பொருட்களை கையளித்திருந்தார்.

மேற்படி இதய அதிர்வு இயந்திரம் உதவியுடன் நோயாளர்களுக்கு இதய சத்திர சிகிச்சையினை வழங்க முடியும். (ம-7,10)

## புத்தூர்...

இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் - புத்தூர் வாதரவத்தையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் உயிரிழந்தவர்களின் உறவுகளால்படுகொலை செய்யப்பட்ட இடத்தில் தீபங்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

1989ஆம் ஆண்டு வாதரவத்தையில் இந்திய அமைதிப்படையினரால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## பிரதமர்...

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுவின் தலைவர் என்ற வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த அழைப்பை ஏற்று வருகை [illegible]

நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தல் செய்யும் கலந்துரையாடல் ஒன்றை சூம் செயலி ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் காலை நடத்தினார்.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதமரின் மகனுமான யதாமினி, வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டனர். (ம-7,10)

## ஜனாதிபதியாக...

எப்போது நடைபெற வேண்டும் என்ற விடயத்தையும், ஒக்ரோபர் எட்டாம் திகதிக்கிடையில் தேர்தல் நடைபெறும் என்ற விடயத்தையும் கூறி இருக்கின்றார்கள்.

பெரும்பான்மை மக்கள் பொதுத் தேர்தல் தொடர்பாக இன்று ஒரு சலனத்துடன் ஆராய்ந்து கொண்டு இருக்கின்றபோது பல விடயங்கள் வெளிவந்திருக்கின்றன. வருகின்ற எட்டாம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடைய தற்போதைய குழுவினர் மற்றும் துமிந்த திசாநாயக்க மாபெரும் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு முன்னர் எதிர்வரும் ஆறாம் திகதி கஞ்சன விஜேசேகர மாபெரும் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருக்கின்றார். இதில் மொட்டுக் கட்சியினருக்கு அழைப்பு விடுக்கவில்லை. அதே நேரத்தில் மொட்டுக் கட்சியை சேர்ந்தவர்கள் அந்த கூட்டத்துக்குச்செல்ல வேண்டாம் என்று அதனுடையதலைமை வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதிக்கிடையில் சஜித் பிரேமதாஸவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தி அதில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராகவும் சஜித் பிரேமதாஸவை பிரதமர் வேட்பாளராகவும் கொண்டு வருவதற்கான முயற்சியினை இரு பக்கத்தில் உள்ள சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் [illegible] முன்னெடுத்திருக்கின்றார்கள்.

ஆகவே 17ஆம் திகதிக்கிடையில் ஒரு பொதுத் தேர்தல் தொடர்பான விடயம் காத்திரமாக முடிவு செய்யப்பட இருக்கிறதா? இல்லையா? என்பதை பற்றி நாம் காத்திருக்கின்றோம்.

இந்த விடயம் வந்ததன் பிறகு எமது கட்சியினுடைய நிலைப்பாட்டை நாங்கள் அறிவிக்க இருக்கின்றோம் எனவும் தெரிவித்தார். (ம-7,10)

## ஜனாதிபதித் தேர்...

துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு தமக்கு பலர் கோரிக்கை விடுத்துவருவதாக தெரிவித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில போட்டியிடுவது குறித்து எதிர்வரும் சில நாட்களில் தீர்மானம் எடுக்கப்படும் என அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

மஹஜன சம்பத
திகதி 2024.06.07
சீட்டிழுப்பு இலக்கம் 5497
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 7 3 7 0 9 8
அத சம்பத
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 7 0 9 8
சீட்டிழுப்பு இலக்கம் 072
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1527
T 16 51 57 67 T
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
லக்கி Double Chance 14068
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

மெகா பவர்
திகதி 07/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1845
X 18 01 06 18 77
Double Chance 47125
தொலைபேசி 0112-470462, 0114-607000 இணையம் www.nlb.lk

லக்கி 7 VIP
திகதி 2024.06.07
சீட்டிழுப்பு இலக்கம் 323
Z 1 5 4 8 7 3 Z
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3739
சீட்டிழுப்பு திகதி | 07.06.2024
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 09 23 49 66
B 95151
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.07
சீட்டிழுப்பு இலக்கம் 0806
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 03 32 34 51 சிம்மம்
63303 தேசிய லொத்தர் சபை 08

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.06.2024 வெற்றி வாரம் 205 வர்ணம் வெளிர் இளஞ்சிவப்பு
ஆங்கில எழுத்து D மற்றும் வெற்றி இலக்கம் 1 5 8 0 0 6
68960 G
அடுத்த சுப்பர ஜக்பொட ரூ.23,541,544.00
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2471 வர்ணம் இளஞ்சிவப்பு சீட்டிழுப்பு திகதி 07.06.2024 தினம் வெள்ளி
வெற்றி இலக்கங்கள் 02 25 43 70 O
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கு 33968
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 92,136,602.40
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
திகதி 2024.06.07 வெற்றி வாரம் 4632 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 27 29 45 69 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,940,375.60
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 70732
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி SASIRI
வெற்றி வாரம் 486
சீட்டிழுப்பு திகதி 2024.06.07
பச்சை
வெற்றி இலக்கங்கள் 05 | 09 | 24
08
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ.100,000/- பணப்பரிசு 79405
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ 3,168,200/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4183 வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.07 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 29 35 62 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,781,738.80
விசேட இலக்கத்திற்கு ரூ.50,000/- பணப்பரிசு 824269
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 16 20 56 60 74
சுப்பர் இலக்கம்
1647 வெளிர் பழுப்பு 07.06.2024 வெள்ளி
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கு 936436
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 526,409,018.20
DLB அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2297
சீட்டிழுப்பு திகதி : 2024.06.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.118,366,326.40
வெற்றி இலக்கங்கள் 25 26 67 70 J
ரூ.100,000/- பணப் பரிசுகளுக்கான விசேட இலக்கங்கள் 495318
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடை வாடகைக்கு

259, பிரதானவீதி, பருத்தித்துறையில் பள்ளிவாசலுக்கு அருகாமையில் அமைந்துள்ள நீளம் 53 அடி, அகலம் 26 அடி அளவினைக் கொண்ட புதிய கடைக்கட்டடம் வாடகைக்கு உண்டு.
குறிப்பு : புடவைக்கடை, பான்சிக்கடை விரும்பத்தக்கது (C-549)

தொடர்புகளுக்கு:
**076 942 6310, 077 033 3390**


## ஜூன் 17 ஆம் திகதி ஹஜ் பெருநாள்

கொழும்பு பெரிய பள்ளிவாசல்

(கொழும்பு)

துல் ஹிஜ்ஜஹ் மாதத்தின் தலை பிறை தென்பட்டுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் தெரிவித்துள்ளது.

இதன்படி இம் மாதம் 17ஆம் திகதி ஹஜ் பெரு நாளை கொண் டாட முடியுமென கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறி வித்துள்ளது.

(ம-7.10)


## Scholarship Class (Part - 1)

புலமைப்பரிசில் வினாத்தாள் 1 ற்கான துரித தயார்ப்படுத்தல் வகுப்புக்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் (09.06.2024 முதல் ஆரம்பம்) நடைபெறவுள்ளது (1140)

| நேரம் | இடம் |
| --- | --- |
| 6 - 7 pm (exam) | புகையிரத வீதி, இணுவில் |
| 7 - 9 pm (discussion) | கிழக்கு, சுன்னாகம் |

**Mr.S.Tharshan (SLPS)**
**077 454 0529**

(முதல் 20 பேருக்கு மாத்திரமே அனுமதி)
தரம் 3, 4 மாணவர்களுக்கான வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம். ZOOM வழிமூலம் தொடர விரும்பியவர்களும் தொடரமுடியும்.

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

அழகுக்கு வளர்க்கும் கோழி இனங்களையும் ஒரு நாள் கோழிக்குஞ்சுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
( கருங்கோழி, பிறாமா கொச்சின், பெண்டம் ) (1139)

**076 791 7735**

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0552)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள் (1126)

தொடர்புகளுக்கு:
**074 17 37 684**

## Laptop விசேட விலைக்கழிவில்

O/L , A/L மாணவர்களுக்கானது
I5 Laptop 48750/= தொடக்கம் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்

SKY Computer
189 1/1 K.K.S Road, Jaffna (C-0550)
021 222 1417,075 069 8608

## அமெரிக்க லொத்தர் விசா முடிவுகள் வெளியாகிவிட்டன

நீங்கள் அமெரிக்க அதிஸ்ட விசா வெற்றியாளரா? உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

எமக்கூடாக விண்ணப்பித்தவர்கள் எமது கிளைகளில் நேரடியாக பார்வையிடலாம்.

ஆரம்ப விண்ணப்பம் முதல் இறுதி விசா நேர்காணல் வரை முழுமையாக உதவ தயாராக உள்ளோம். (C-0552)

V2 TRAVELS 0768226244

## V2 VISA SERVICES

கனடா Visit Visas
077 77 20 322
077 77 19 322
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

வீமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0552)

## காரைநகர் - புதுறோட், கிழவன்காடு
## அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்

புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக பெருவிழா - 2024

09.06.2024 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.38 - 11.26 மணி (C-0547)

## வேலைவாய்ப்பு

இங்கிலாந்தில் உள்ள Software Company க்கு கீழ் வரும் Software language தகைமை உள்ளவர்கள் பணிக்கு சேர்க்கப்படவுள்ளார்கள். இவற்றில் ஏதாவது ஒரு Software language தெரிந்தால் அது போதுமானது.

1) Golang Developers - 1 வருடம் அனுபவம்
2) Flutter Developers - 1 வருடம் அனுபவம்
3) Creative Graphics Designers - 1 வருடம் அனுபவம்

உங்களது Biodata ஐ கீழ் காணும் Email முவரிக்கு உடனடியாக அனுப்பவும்.

**HR@ntsretail.co.uk** (1098)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். (1122)

Golden Real Estate (pvt) Ltd
Director & Owner : T.Kalaithasan
077 029 4164,
077 329 4130, 077 294 1521

## வட இந்திய யாத்திரை

காசி, அயோத்தி, சீரடி பாபா யாத்திரை

ஆரம்பம் - 15.08.2024 | நாட்கள் - 15

காசி, காலபைரவர், கங்கை பூஜை அயோத்தி, னைய்மி சரண்ஜம், திருவேணி சங்கமம், கங்கா, யமுனா சரஸ்வதி, கயா,புத்தகயா, சீதா மண்ணுக்குள்ளே புதைந்த இடம், சீரடி பாபா, சனி சிங்கனாபூர், இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி அம்மன் உத்திர கோச மங்கை, திருப்புலாணி (1038)

## தென்னிந்திய யாத்திரை

ஆரம்பம் - 05.07.2024 | நாட்கள் - 15

60ற்கு மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு

T. ஸ்ரீரங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
**077 768 0102, 077 736 2154**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
| --- | --- | --- |
| 1 Kg வெள்ளை சீனி | - 274/= | (Max)5Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 175/= | |
| 5 Kg Prima கோதுமை மா | - 980/= | ~~1150/=~~ |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 410/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 750ml நல்லெண்ணை | - 1455/= | ~~1550/=~~ |
| 01 Supiri மீன் ரின் | - 490/= | ~~650/=~~ |
| 1Kg சன்லைட் பவுடர் றோஸ் | - 350/= | ~~450/=~~ |
| 180ml Chik சம்போ | - 390/= | ~~480/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3600/= | ~~3900/=~~ |
| 400g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |

400g Anchor 1000/= ~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (1144)
Happy Supermarket 0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org